விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 கார்த்திகை 18 புதன்கிழமை (03.12.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 349

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL
CALL :- 222 5908/222 8812

# இலங்கையில் போர் நிறுத்தப்படும்

# தமிழக எம்.பிக்களிடம் பிரதமர் உறுதி

## நாளை கருணாநிதி சந்திப்பு

(புதுடில்லி)

இலங்கையில் நடக்கும் போரினால் அப்பாவி மக்கள் கொல்லப் படுவது கண்டிக்கத்தக்கது. இது பற்றி இலங்கை அரசிடம் நிச்சயம் பேசுவேன். போர் நிறுத்தம் வேண்டும் என்று வலியுறுத்துவேன் என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

தமிழக எம்.பிக்கள் 34 பேர் அவரைச் சந்தித்தபோதே அவர் இவ் உறுதிமொழியை வழங்கியுள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)



## மணலாறு நோக்கி எறிகணைத் தாக்குதல்

(கிளிநொச்சி)

மணலாறு பகுதியில் உள்ள படையினர் நேற்று காலை 8 மணி தொடக்கம் எறிகணைத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

பூதன்வயல், கணுக்கேணி, குமாரபுரம் ஆகிய மக்கள் வாழ்விடங்களை இலக்கு வைத்து இந்த எறிகணைத் தாக்குதலினை படையினர் நடத்தினர்.

படையினரின் எறிகணைகள் முள்ளியவளை, தண்ணீரூற்று மக்கள் வாழ்விடங்களை அண்டிய பகுதிகளிலும் வீழ்ந்து வெடித்துள்ளன. (12ஆம் பக்கம் பார்க்க)

## கவலையை தெரிவித்தோம் ஆறுதல் அளித்தார் பிரதமர்

### கனிமொழி தெரிவிப்பு

(புதுடில்லி)

இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய மத்திய அரசு வலியுறுத்த வேண்டும் என்று மத்திய அமைச்சர் டி.ஆர் பாலு தலைமையில் தமிழகத்தை சேர்ந்த 34 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரை நேரில் சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர்

கவிஞர் கனிமொழி, கே.வி.தங்கபாலு உட்பட தி.மு.க., காங்கிரஸ், பா.ம.க மக்களவை உறுப்பினர்கள் பிரதமர் சந்திப்பில் பங்கேற்றனர். பிரதமரை சந்தித்து விட்டு வெளியே வந்த கனிமொழியிடம் அச்சந்திப்பு பற்றி செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு அவர்,

இலங்கையில் போர் நிறுத்தம் வேண்டி வலியுறுத்தவும் (12ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவின் உதவிப் பொருட்கள் வன்னியைச் சென்றடைந்தன

(கிளிநொச்சி)

தமிழக மக்களால் அனுப்பப்பட்டுள்ள நிவாரணப் பொருட்கள் வன்னிக்கு கொண்டு சென்று சேர்க்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் அரச செயலக களஞ்சியங்களில் அவற்றினை இறக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

தமிழக முதல்வர் மு.கருணாநிதியின் வேண்டுகோளினை அடுத்து தமிழக மக்கள் தாமாக (12ஆம் பக்கம் பார்க்க)



## பிரதித் தலைவர் பதவிக்கு எஸ்.பி விண்ணப்பம்

இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் பதவிக்காக கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி திசநாயக்க விண்ணப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடிய பின்னர் பிரதித் தலைவர் பதவிக்கு விண்ணப்பித்துள்ளதாக எஸ்.பி.திசநாயக்க தெரிவித்தார்.

ஐ.தே.கவின் சம்மேளனக் கூட்டம் இந்த மாதம் இடம்பெறவுள்ளது. அதன் பின்னர் செயற்குழு கூட்டம் நடைபெற்று பிரதித் தலைவர் பதவிக்கான வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச—5)

## விசாரணைகள் முடியும் வரை ஏற்றுமதி வரிச்சலுகை நீடிக்கும்

(பிரஸ்சல்ஸ்)

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஏற்றுமதி வரிச்சலுகை (ஜி.எஸ்.பி. பிளஸ்) மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்துடன் முடிபடையும் இலங்கைக்கான ஏற்றுமதி வரிச்சலுகையை மேலும் நீடிக்க வேண்டுமாயின் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

அது குறித்து விசாரணைகளை நடத்துவதற்காக அடுத்த வருட நடுப்பகுதி வரை ஏற்றுமதி வரிச்சலுகையை நீடிப்பதற்கு தீர்மானித்திருப்பதாக ஐரோப்பிய ஒன்றிய அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் தமக்கு அறிவித்திருப்பதாக சர்வதேச வர்த்தகத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.ரனுகே தெரிவித்தார்.

இலங்கைக்கான ஏற்றுமதி வரிச்சலுகையை நீடிப்பதாயின் பொதுமக்களின் அரசியல் உரிமைகள் மற்றும் மனித உரிமைகள் பாதுகாக்கப் (12ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு எம்.பிக்கள் சென்னையில் ஆலோசனை

(கொழும்பு)

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து விவாதிப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி இந்தியாவில் ஆலோசனை நடத்தவுள்ளனர்.

இது குறித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எம்.பி. சிவாஜிலிங்கம் பெங்களூரில் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

இலங்கையில் அப்பாவி தமிழர்கள் மீது இராணுவம் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இதில் இந்தியா தலையிட வேண்டும் என வலியுறுத்தி வருகிறோம்.

இந்த (12ஆம் பக்கம் பார்க்க)

## பாக்.மீது இராணுவ நடவடிக்கை எடுப்பது பற்றி பரிசீலிக்கவில்லை

### இந்தியா தெரிவிப்பு

(புதுடில்லி)

மும்பையில் நடைபெற்ற பயங்கரவாத தாக்குதல்களை அடுத்து பாகிஸ்தான் மீது இராணுவ நடவடிக்கை எடுப்பது பற்றிப் பரிசீலிக்கவில்லை என்று இந்தியா கருத்துத் தெரிவித்துள்ளது.

அதேநேரத்தில் பாகிஸ்தானில் செயல்படும் பயங்கரவாத குழுக்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற இந்தியாவின் கோரிக்கை மீது பாகிஸ்தான் அரசு எப்படி செயற்படுகிறது என்பதை பொறுத்திருந்து பார்க்க இருப் (12ஆம் பக்கம் பார்க்க)

## கிளஸ்டர் குண்டு பாவனைக்கு எதிராக நோர்வேயில் கவனயீர்ப்பு ஒன்றுகூடல்

(நோர்வே)

கிளஸ்டர் குண்டு பாவனைக்கு எதிரான உடன்படிக்கையில் 100க்கும் அதிகமான உலக நாடுகள் கைச்சாத்திடவுள்ள மாநாடு இன்று நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவில் நடைபெறவுள்ளது.

அரசாங்கம் கிளஸ்டர் குண்டுகளை பயன்படுத்துவது அம்பலமாகியுள்ளது.

வன்னியில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த குடியிருப்பு மீது கடந்த சனிக்கிழமை இந்த வகை குண்டுகள் வீசப்பட்டு ஐந்து வயது குழந்தை உட்பட இருவர் கொல்லப்பட்டுள்ளனர். ஏழு சிறுவர்கள் உள்ளிட்ட 21 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

அணுகுண்டுக்கு அடுத்தபடியாக பேரழிவு ஆயுதமாக (12ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# குடாநாட்டை மீளக் கட்டியெழுப்ப அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டையே பேரழிவுக்கு உட்படுத்திய அடைமழை பெரு வெள்ளம் காரணமாக ஏற்பட்ட சேத அழிவுகளிலிருந்து குடாநாட்டு மக்களையும் பிரதேசங்களையும் மீட்டெடுக்கும் துரித நடவடிக்கைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் ஆரம்பமாகியுள்ளது.

யாழ்.குடாநாட்டில் 9 பேர் மரணமடையவும் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயரவும் கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியான சொத்துக்கள் அழிவடையவும் காரணமான மேற்படி அனர்த்தத்திலிருந்து மீளக் கட்டமைப்பினை ஏற்படுத்தும் முதற்கட்டமாக நிதியுதவி பெற்றுக் கொள்ளும் முகமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விசேட அமைச்சரவை பத்திரம் ஒன்றை தாக்கல் செய்கின்றார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரையின் பிரகாரம் யாழ்.செயலகத்தால் இதுவரை திரட்டப்பட்ட தகவலின்படி விவசாயம், கடற்றொழில், கால்நடை, வீடமைப்பு, நீர்வழங்கல், சுகாதாரம்,கல்வி, போக்குவரத்து, உள்ளூராட்சி மற்றும் மனிதவலு என்பவற்றுக்கு ஏற்பட்ட மொத்த இழப்பு 9 ஆயிரத்து 285 மில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் மீள் கட்டமைப்பு நிவாரண நடவடிக்கைகளுக்கு மேலாக ஐ.நா நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற தன்னார்வுத் தொண்டு நிறுவனங்களும் உதவ முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (ச-5)

# பயணிகள் கப்பல் சேவை நாளை இடம் பெறும்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலைக்கான பயணிகள் கப்பல் சேவை நேற்று மீண்டும் ஆரம்பமானதாக இராணுவ யாழ். சிவில் நிர்வாக அலுவலகர் மேஜர் பெரேரா தெரிவித்தார்.

அத்துடன் அடுத்த கப்பல் சேவை நாளை இடம் பெறுமெனவும் அவர் குறிப்பிட்டார். (ச-5)

# ஓமந்தைக்கு நேற்று விசேட பஸ் சேவை

(வவுனியா)

காலநிலை மற்றும் பாதுகாப்புக் காரணங்களுக்காக ஓமந்தை சோதனைச் சாவடி ஊடாக வன்னிப்பகுதிக்கான போக்குவரத்து தடைப்பட்டிருந்ததையடுத்து, வவுனியாவில் தங்கியிருந்த வன்னிப்பகுதி மக்கள் நேற்று விசேட பஸ் வண்டி மூலமாக ஓமந்தை சோதனைச் சாவடிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதற்கான பஸ் ஒழுங்குகளை பொதுமக்களின் வேண்டுகோளையடுத்து வவுனியா அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் மேற்கொண்டிருந்தார்.

பலதடவைகள் தாண்டிக்குளத்திற்கும் ஓமந்தைக்கும் சென்று, இவர்களின் பலர் தமது பிரயாணத்தை மேற்கொள்ள முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பி வந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

# வெள்ள நிவாரணம் என்று கூறி தொண்டு நிறுவனங்கள் வன்னிக்கு செல்ல முயற்சி

(கொழும்பு)

வெள்ள அனர்த்தத்திற்கு நிவாரணங்களை வழங்க உள்ளதாகக் கூறிக்கொண்டு சில அரச சார்பற்ற நிறுவனங்கள் மீண்டும் வன்னிக்குச் செல்ல எத்தனிப்பதாக அரசாங்கத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வன்னி மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதாகக் கூறி அனுமதி கோரிய பல அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு அரசாங்கம் அனுமதியளிக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

வன்னியில் மட்டும் சுமார் 70 ஆயிரம் மக்கள் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் தகவல் வெளியிட்டிருந்தது.

அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்குவதற்காக அரச சார்பற்ற நிறுவனங்களை வன்னிக்குச் செல்ல விதிக்கப்பட்டிருந்த தடையையும் நீக்குமாறு அரசாங்கத்தை மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரியிருந்தது.

குறித்த அமைப்பின் ஊடாக சில அரச சார்பற்ற நிறுவனங்கள் வன்னிக்குச் செல்ல முயற்சிப்பதாக அரசாங்க உயர் அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எவ்வாறெனினும், அரசாங்கமும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் நிவாரணங்களை வழங்கி வருவதாகவும், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரவேசம் யுத்த முன் நகர்வுகளை பாதிக்கும் எனவும் பாதுகாப்பு தரப்பு உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (ச-5)

# வேலணைப் பகுதியில் 11ஆயிரம் பேர் இடம்பெயர்வு

(வேலணை)

கடும் காற்று மற்றும் வெள்ளப்பெருக்கினால் வேலணை பிரதேச செயலர் பிரிவில் சுமார் 3 ஆயிரத்து 400 குடும்பங்களைச் சேர்ந்த 11ஆயிரத்து 700பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

இவர்கள் பாடசாலைகளில் தங்கவைக்கப்பட்டு தற்பொழுது தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளனர்.

இதேவேளை 78 வீடுகள் முற்றாகவும் 533 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது.

மழை மற்றும் வெள்ளப்பெருக்கினால் சின்னமடு, அல்லைப்பிட்டி, மற்றும் நயினாதீவு ஆகிய பகுதிகள் கடுமையாகப் பாதிப்படைந்ததாக தெரிவிக்கப்பட்டது. (ச)

# முதுகலைமாணி கற்கை நெறி பரீட்சைகள் பிற்போடப்பட்டது

முதுகலைமாணிக் கற்கைநெறிகளான அபிவிருத்திக் கற்கைநெறி, குடித்தொகை அபிவிருத்திக் கற்கைநெறி, பிரதேச திட்டமிடல் கற்கைநெறி ஆகிய கற்கைநெறிகளின் முதலாம் பருவ பரீட்சைகள் ஏற்கனவே திட்டமிட்டபடி எதிர்வரும் 8ஆம் திகதி நடைபெறமாட்டாது எனவும் இப்பரீட்சைகள் யாவும் எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பமாகும் என்றும் பட்டப்பின் படிப்புக்கள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

இதேவேளை வவுனியா வளாகத்தில் நடாத்தப்பட்டு வரும் கல்வியாண்டு 2005/07க்குரிய பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறியின் இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டுக்கான பரீட்சை திட்டமிட்டபடி எதிர்வரும் 6 ஆம் திகதி அன்று வியாபாரக் கற்கைகள் பீடம், வவுனியா வளாகத் திலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் நடைபெறும்.

மேற்படி பரீட்சைகளுக்கான பரீட்சை அனுமதி அட்டைகளை பட்டப்பின் படிப்புக்கள் பீடத்தில் இன்றிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கல்வியியல் முதுமாணி கற்கை நெறிக்கான முதலாம் அரையாண்டுப் பரீட்சை மற்றும் பொது நிர்வாகத்தில் பட்டப்பின் டிப்ளோமா கற்கைநெறி, நூலக தகவல் விஞ்ஞானத்தில் பட்டப்பின் டிப்ளோமா கற்கை நெறி ஆகிய கற்கைநெறிகளுக்கான மீள் பரீட்சைகளும் எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்பமாகும் என பட்டப்பின் படிப்புக்கள் பீட பீடாதிபதி அறிவித்துள்ளார். (ச)


## தவறிவிட்டது

உரும்பராய் வடக்கு, உரும்பராய் என்னும் முகவரியில் வசிக்கும் செல்வப்பிரகாசம் -தவச்செல்வம் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை இல:- 603376953 V மற்றும் எனது அலுவலக அடையாள அட்டை என்பன 19.11.2008 அன்று உரும்பராய் கிழக்கிற்கும் உரும்பராய் அஞ்சலகத்திற்குமிடையில் காணாமல் போய் விட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் உரும்பராய் அஞ்சல் அலுவலக கருமபீடத்தில் ஒப்படைக்குமாறு மிகத் தயவாக கேட்டுக் கொள்கிறேன். நன்றி

*தகவல்:* **செ.தவச்செல்வம்**

**'அஞ்சலகம்', அஞ்சலர், உரும்பராய்.** (931)


# 205 பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இரண்டாம் கட்டமாக 205 பட்டதாரிகளுக்கு விரைவில் ஆசிரிய நியமனம் வழங்கப்படவுள்ளது.

நியமனம் வழங்கப்படவுள்ள பட்டதாரி ஆசிரியர்களின் விபரங்கள் அனைத்தும் பூர்த்தியடைந்துள்ளதாகவும் நியமனம் விரைவில் வழங்கப்படும் எனவும் கல்வி அமைச்சு தெரிவித்தது. (ச)

# இழுவைப் படகைப் பயன்படுத்த தொடர்ந்தும் தடை விதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குடாக்கடல் பகுதியில் இழுவைப் படகுகளை பயன்படுத்தி மீன் பிடிப்பதற்கு கடற்படையினர் தொடர்ந்தும் தடைவிதித்துள்ளனர்.

பூநகரியை இராணுவத்தினர் கைப்பற்றியதைத் தொடர்ந்து யாழ்.குடாநாட்டின் தீவகப் பகுதிகளில் மீன் பிடிப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை தளர்த்தப்பட்டது.

மீன்பிடித் தடை தளர்த்தப்பட்டமையால் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை குடாக்கடல் பகுதியில் மீன் பிடிப்பதற்கு மீனவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் முதல் மீன்பிடிப்பதற்கான அனுமதியை 512-வது படைப்பிரிவு வழங்கியுள்ளது.

எனினும் இழுவைப் படகுகளைப் பயன்படுத்தி மீனவர்கள் மீன் பிடிப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை.

15 குதிரைவலு அல்லது அதற்கு குறைவான குதிரைவலுக் கொண்ட வெளியிணைப்பு இயந்திரங்கள் பொருத்தப்பட்ட படகுகளைப் பயன்படுத்துவதற்கும் தும்புக்கண்ணாடி இழைகளிலான படகுகளைப் பயன்படுத்துவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மீன்பிடித் தடைத்தளர்வை தொடர்ந்து குருநகர்ப் பகுதியைச் சேர்ந்த 236 படகுகள் மீன் பிடித் தொழிலுக்குச் சென்றுள்ளன.

வழமையான அடையாள அட்டைகள் மற்றும் அனுமதிப் பத்திரங்களை பரிசீலித்த பின்னர் மீன்பிடிப்பதற்கு அனுமதிக்கப்படுகின்ற போதும் முன்னரைப் போன்று மீன் பிடிப்பவர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

# உலக வலுவிழந்தோர் தின நிகழ்வு பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்விவலய விசேடகல்விப் பிரிவால் இன்று நடாத்தப்பட விருந்த உலக வலுவிழந்தோர் தின நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. இந்நிகழ்வு நடாத்தப்படும் நாள் குறித்து பின்னர் அறிவிக்கப்படும். (ச)

# பாதிக்கப்பட்டவர்களுக்கு கரிதாஸ்-கியூடெக் உதவி

கடந்த வாரம் இடம்பெற்ற 'நிஷா' சூறாவளி மற்றும் பெருவெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு யாழ்.பிரதேச செயலர் பிரிவில் உள்ள 28 தற்காலிக நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் 3 ஆயிரத்து 022 குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு கரிதாஸ்-கியூடெக் நிறுவனம் தேவையான அத்தியாவசிய பொருட்களை வழங்கி வருகிறது.

இதேவேளை இவ் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு 15 நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்களுக்கு உணவு உதவியை கடந்த வாரம் வழங்கியிருந் தமையும் குறிப்பிடத்தக்கது. (எ)


## மக்கள் வங்கி அடகுநகை ஏலவிற்பனை
## பிற்போடும் அறிவித்தல்

யாழ். மாவட்டத்தில் இயங்கும் மக்கள் வங்கிக்கிளைகளில் எதிர்வரும் 06ம், 7ம், 13ம், 14ம், 15ம் மற்றும் 16ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த அடகுநகை ஏல விற்பனை, குடாநாட்டில் ஏற்பட்ட திடீர் இயற்கை அழிவுகளின் காரணமாக வாடிக்கையாளர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களைக் கருதி குறிப்பிட்ட திகதிகளில் நடைபெறமாட்டாது. பணத்தைச்செலுத்தி நகைகளை மீளப் பெற்றுக் கொள்வதற்கும், வட்டியைச் செலுத்தி அடகு நகைகளைப் புதுப்பித்துக்கொள்வதற்குமான கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

**ஏல விற்பனை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.**

**த.க. ஆனந்தராசா,**
**உதவிப்பொது முகாமையாளர் (வடவலயம்),**
**மக்கள் வங்கி,**
**பிராந்திய தலைமையலுவலகம், யாழ்ப்பாணம்.**

2008.12.01 (C-1813)



*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை*
*வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு*

## வெளிவாரிப் பரீட்சைகள் -2007

1. கலைமாணி பகுதி- II -2004 & 2005
2. சிறப்புக் கலைமாணி பகுதி -II -2004 & 2005
3. சிறப்புக் கலைமாணி பகுதி -III -2004

*மேற்படி பரீட்சைகளை 13.12.2008 (சனிக்கிழமை) தொடக்கம் 24.12.2008 (புதன்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மற்றும் வவுனியா வளாகத்திலும் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.*

*பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளையும் 10.12.2008 (புதன்கிழமை) தொடக்கம் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகிலும், வவுனியா வளாகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

**மேலதிக விபரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.**

***பதில் பதிவாளர்***
01.12.2008 (C-1812)

# இன்று ஒரு தகவல்

## ஏற்றுக் கொள்ளுங்கள்

நம்மில் சிலருக்கு எதிரில் உள்ளவர்கள் எல்லோருமே எதிரியாகத் தெரிவார்கள். பார்ப்பதெல்லாம் பகையாய் தெரியும். "உன்னைச் சுற்றியிருக்கும் எல்லாம் உனக்கு வெறுப்பைத் தருவதாக நீ உணர்ந்தால் ... உனக்குள் நீ வெறுப்புடன் இருக்கிறாய் என்பதை அது காட்டுகிறது!" என்கிறார் ஓஷோ.

அவர் ஒரு சமயம் ஒரு கிராமத்திற்கு போய் இருக்கிறார். அங்கே ஒரு ஓய்வு விடுதியில் தங்கியிருந்தாராம். இரவானால் அங்குள்ள நாய்கள் எல்லாம் வந்து மரத்தடியில் கூடி குரைக்க ஆரம்பித்துவிடும். அதே நேரம் அங்கு மந்திரி ஒருவரும் வந்து தங்கி இருக்கிறார்.

அவருக்கு அந்த நாய்கள் குரைப்பது பெரிய தொந்தரவாக போய்விட்டது. தூங்க முடியவில்லை எழும்பி இவரிடத்தில் வந்திருக்கிறார்.

அந்தச் சமயம் இவர் அசந்து தூங்கிக்கொண்டு இருந்திருக்கிறார். இவரை எழுப்பி, "சுற்றிலும் இவ்வளவு சத்தங்களுக்கிடையில் உங்களால் எப்படி நிம்மதியாக தூங்க முடிகிறது?" என்று கேட்டிருக்கிறார். அதற்கு இவர் "அந்த நாய்கள் உங்களுக்காக கூடவில்லை. உங்களை தொந்தரவு செய்ய வேண்டும் என்பதற்காக அவை இங்கு வரவில்லை. ஒரு மந்திரி இங்கே வந்து தங்கியிருக்கிறார் என்று அவற்றுக்குத் தெரியாது. அவையெல்லாம் தங்களுடைய வேலையை செய்து கொண்டிருக்கின்றன. நீங்கள் ஏன் துன்பப்படுகிறீர்கள்?" என்றார்.

"அவையெல்லாம் குரைத்து சத்தம் போட்டுக் கொண்டிருந்தால் நான் எப்படி துன்பப்படாமல் இருக்க முடியும்?" என்றார் அவர்.

அதற்கு இவர் விளக்கம் கொடுத்தார்.

நீங்கள் அவை உரைப்பதை எதிர்த்துப் போராடாதீர்கள். நீங்கள் அவற்றோடு போராடுகிறீர்கள். அது தான் பிரச்சினையை உண்டாக்குகிறது. பிரச்சினையை உருவாக்குவது அவற்றின் சத்தம் இல்லை. உங்களுடைய போராட்டம் தான் அந்த சத்தம் உங்களை தொந்தரவு பண்ணவில்லை. அந்த சத்தத்தினால் நீங்களே உங்களை தொந்தரவு செய்து நாய்கள் குரைப் பதை நிறுத்தினால் தான். நான் தூங்க முடியும் என்ற நிபந் தனையை ஏற்படுத்தி கொண்டிருக்கிறீர்கள்.

உங்கள் நிபந்தனையை நாய்கள் கவனிக்கப்போவதில்லை. ஆனால் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? உங்கள் நிபந்தனை நிறைவேறினால் தான் தூங்க முடியும் என்று நினைக்கிறீர்கள். அதனால் உங்கள் நிபந்தனை தான் உங்களை தொந்தரவு செய்கிறது. நீங்கள் செய்ய வேண்டியது என்ன தெரியுமா? நாய்கள் குரைப்பதை ஏற்றுக்கொள்ளுங்கள். அவை சத்தத்தை நிறுத்தினால் தான் தூங்குவேன் என்ற நிபந்தனையை விலக்குங்கள்!

நம்மைச் சுற்றியுள்ள உலகத்தை நமக்குத்தகுந்த மாதிரி நிர்ப்பந்தப்படுத்த வேண்டும் என்று நினைப்பது முடியாத காரியம். எது எப்படி இருக்குமோ அதை அப்படியே ஏற்றுக்கொள்ளப் பழகிக்கொள்ள வேண்டும். ஒருவர் தனது வீட்டில் தினமும் பயங்கரமான குறட்டைச் சத்தம் கேட்டுக்கொண்டே இருக்கும். இருந்தாலும் தனக்கு தொந்தரவாக இல்லை. தினமும் பழகிப்போய் விட்டது என்றார்.

குறட்டைவிடுவது யார்? உங்கள் மனைவியா? என்று கேட்டேன்.

"இல்லை. நான் தான் அது" என்றார் சிரித்துக் கொண்டே!

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தேசிய பாடசாலைகளுக்கு 1728 பட்டதாரிகள்; வடக்கு-கிழக்கு 330 பேர் நியமனம்

## பிரதிக்கல்வி அமைச்சர் தகவல்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் உள்ள தேசிய பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை தீர்க்கும் பொருட்டு அப்பாடசாலைகளுக்கு 1728பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதிக்கல்வி அமைச்சர் எம். சச்சிதானந்தன் தெரிவித்தார்.

கடந்த வாரம் கல்வி அமைச்சில் இடம் பெற்ற கூட்டம் ஒன்றிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித் தார்.

பிரதி அமைச்சர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையில் இலவச கல்வி முறையின் மற்றுமொரு சாதனையாக பட்டதாரி ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் கண்டறியப்பட்டு அதனை உரிய முறையில் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாக கடந்த வருடம் போட்டிப்பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்பட்ட 1728 பட்டதாரிகளுக்கு இவ்வருடத்திலும் நேர்முகப்பரீட்சைகள் நடத்தப்பட்டு ஆசிரிய நியமனங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் சிங்கள மொழி மூலம் 628 ஆசிரியர்களும் தமிழ் மொழி மூலம் 669 ஆசிரியர்களும் ஆங்கில மொழி மூலம் 431 ஆசிரியர்களும் நியமிக்கப்படவுள்ளனர்.

தமிழ் மொழிமூல ஆசிரியர்களில் மேல் மாகாணத்திற்கு 52. தென் மாகாணத்திற்கு 57, மத்திய மாகாணத்திற்கு 116, சப்ரகமுவ மாகாணத்திற்கு 17, வடமேல் மாகாணத்திற்கு 48, வடமத்திய மாகாணத்திற்கு15, வடக்கு- கிழக்கு மாகாணத்திற்கு 330, ஊவா மாகாணத்திற்கு 34 என்ற அடிப்படையில் ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளன.

அத்துடன் பெருந்தோட்ட பாடசாலைகளுக்கான பட்டதாரி ஆசிரியர்களின் வெற்றிடங்கள் இதனை பூர்த்திசெய்யும்முகமாக 250பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பது தொடர்பான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றது.

இவ்வாறு வழங்கப்படவுள்ள ஆசிரியர் நியமனத்தின் மூலம் மாணவர் சமுதாயம் மென் மேலும் சிறப்புற்று விளங்குவதுடன் எதிர் காலத்தில் கல்வித்துறையில் பாரிய வளர்ச்சி ஏற்படும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை என அவர் கூறினார். (ஓ)

# பக்கவாத நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்க அனைத்து வைத்தியசாலைகளிலும் விஷேட பிரிவு

## சுகாதார அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சைகளை வழங்குவதற்காக சகல வைத்தியசாலைகளிலும் விசேட பிரிவை அமைக்க சுகாதார அமைச்சு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இதற்குரிய நடவடிக்கைகள் தற்போது துரிதமாக மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக அரச தகவல் திணைக்களம்வெளியிட்டுள்ள அறிக்கையில் இலங்கையில் வயது வந்தவர்களின் சனத்தொகை அதிகரித்து வருவதாகவும் 2ஆயிரத்து 20 ஆம் ஆண்டளவில் சனத்தொகையில் 20 வீதம் வரை 65 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருப்பர் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

வயது வந்தவர்களின் சனத்தொகை அதிகரிப்பதோடு பக்கவாத நோயினால் பீடிக்கப்படுவோரின் தொகையும் அதிகரிக்குமாகையால் பக்கவாத சிகிச்சைப்பிரிவு மேலும் நவீனப்படுத்த இலங்கையின் சுகாதாரப்பிரிவு தற் போது நடவடிக்கை எடுத்து வருகிறது.

நாட்டின் பொருளா தாரத்திற்கு பாரிய அள வில் பாதிப்பை ஏற்படுத் தக் கூடிய இந்த பக்க வாத நோயினால் பாதிப் படைவோர் உலகளா விய ரீதியில் வருடத் திற்கு 15 மில்லியனாக அதிகரித்துள்ளதாக உலக சுகாதார நிறுவனம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

இப்படி பாதிக்கப்பட்டோரில் 70வீதமானோர் வரை மரண மடைந்தோ அல்லது உண வற்ற நிலையிலோ இருப்பதாக அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள் ளது. மூளைக்கு இரத் தோட்டத்தை கொண்டு செல்லும் நாடி, நரம்புக ளில் தடைகள் ஏற்படுதல், மூளைக்கு இரத்தம் பாய் தல், அதிக இரத்த அழுத்தம், கொலஸ்ரோல் வீத அதிகரிப்பு, நீரி ழிவு, மதுபானம், புகைபிடித்தல் போன்றவை பக்க வாத நோய்க்கு காரணிகளாக அமைவதாகவைத்தியஅறிக்கைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

இப் பக்கவாத நோய்அதிகமாக வயது வந்தோரைப் பாதித்தாலும் சில வேளைகளில் இளைஞர், யுவதிகளும் பாதிப்புக்குள்ளாவதாக தேசிய அங்க வலுவுற்றோர் சங்கத்தின் வைத்திய பேராசிரியர் சமன் குணதிலக கூறுகிறார்.

இலங்கையிலுள்ள வயது வந்தவர்களிடையே அதிகமா னவர்கள் இந்தப் பக்கவாத நோயினால் பாதிப்புக்குள்ளாகிறார்கள் என்று மக்கள் இறப்பதற்கு முக்கிய மூன்றாவது காரணியாகவும் அமைவதாக அறிக்கைவெளியாகியுள்ளது.

உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையின் படி இலங்கை உட்பட அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் 80 வீதமா னவர் கள் இறப்பதற்குக் காரணம் இந் நோய்க்கு தகுந்த வசதிக ளுடன் கூடிய சிகிச்சை அளிக்கப்படாமையே ஆகும். தற்போது இலங்கையில் உள்ள பிரதான வைத்திய சாலைகளுக்கு மாத்திரம் மட்டுப் படுத்தப் பட்டுள்ள இந்தப் பக்கவாத நிவாரணப் பிரிவை நாட்டில் சகல வைத்திய சாலை களுக்கும் விஸ்தரிக்க சுகா தார அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

மேலும், இந் நோயினால் பாதிக்கப்பட்டவர்களை பராமரிக்க அவர்களது குடும்ப அங்கத்தவர் களுக்குப் போதிய பயிற்சியையும் அறிவையும் வழங்கவும் புனர் வாழ்வு சம்பந்தமாக விளக்கம்அளிக்கவும் இப் பிரிவின் ஊடாக நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வரு வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-5)

## இராசி பலன்

03.12.2008
(கார்த்திகை 18 ,புதன்கிழமை)
திருவோணம் முன்னிரவு 8.14 மணிவரை
பஞ்சமி முற்பகல் 8.16 மணிவரை
இராகுகாலம் 12.15-1.45 மணிவரை
சுபநேரம் 4.45-06.15 மணிவரை
சஷ்டி விரதம் - இராமநாதர் குருபூசை

| | |
|---|---|
| மேடம் | உறவினர் சந்திப்பு, போசன சுகம், கடின முயற்சி, மேன்மை. |
| இடபம் | பிதா சிந்தை, சரீரப்பிரயாசை, காரிய தாமதம், பித்தரோகம். |
| மிதுனம் | அபகீர்த்தி, ஆரோக்கியக்குறைவு, முயற்சி தாமதம், வாகன பயம். |
| கடகம் | எடுத்த கருமங்கள் கைகூடும், செல்வாக்கு, பொருள் சேர்க்கை . |
| சிங்கம் | நல்ல காரியம் , அதிகாரம், தேக நலன் , பகைவரால் நன்மை. |
| கன்னி | வியாபார விருத்தி, புத்திரரால் கவலை, எடுத்த காரியம் , தாமதமாகும். |
| துலாம் | புதிய உறவு, வீண் பயம், சுப நிகழ்வு , முயற்சி தாமதம். |
| விருச்சிகம் | சகோதரர் உதவி, முயற்சி கைகூடும், போசன சுகம், பிரயாணம். |
| தனுசு | கோபப்படுதல், முயற்சி தாமதம், சுப செலவு, ஆரோக்கியக்குறைவு. |
| மகரம் | தெளிந்த சிந்தை, நல்ல முயற்சி, பெரியோர் உதவி, விருந்துபசாரம். |
| கும்பம் | பிரயாண பயம், நிலை மாற்றம், வேலைச்சுமை, முயற்சி தாமதம். |
| மீனம் | பெரியோர் உதவி , தடைப்பட்ட காரியம் கைகூடும், அதிகாரம், மன மகிழ்ச்சி. |

வளவன்

# பாடசாலைகளில் மாணவர்களை சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள்

(கொழும்பு)

அரசாங்கப்பாடசாலைகளில் அடுத்த ஆண்டு தரம் 1 தவிர்ந்த ஏனைய வகுப்புகளுக்கு மாணவர்களைச் சேர்ப்பதற் கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

இந்த விண்ணப்பங்களை உரிய பாடசாலையின் அதிபருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. எதிர்வரும் 31ஆம் திகதி வரை விண்ணப்பங்களை அனுப்பி வைக்க முடியும் எனவும் அடுத்த மாதம் அதற்குரிய நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்படும் எனவும் கல்வி அமைச்சின் தேசிய பாடசாலைகள் தொடர்பான பணிப்பாளர் தெரிவித்தார். இது பற்றி விளக்கம் அளிக்கும் சுற்றறிக்கைகள் அதிபர் மாருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (ஓ-4)

## சாதகமான முடிவு எட்டியதால் போராட்டத்தைக் கைவிட்டோம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் மாணவர்களால் மேற் கொள்ளப்பட்ட மறியல் போராட்டத்தின் விளை வாக பல்கலைக்கழக நிர்வாகத் துடனான சந்திப்பின் போது வேலை வாய்ப்பு மற்றும் தொடர்ச்சியான கற்றல் தொடர்பாக சாதக மான முடிவுகள் வழங்கப்பட்டுள்ளதால் போராட்டம் கை விடப்பட்டுள்ளதாக விளையாட்டு விஞ்ஞான மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (ஓ)

## இசைப் போட்டி ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் நடத்தப்படவுள்ள கைத்தொழில் மற்றும் கல்விக் கண்காட் சியின் ஓர் பகுதியாக கலை, கலாசார நிகழ்வுகள் அடுத்த மாதமளவில் நடத்தப்படவுள்ளது.

இந் நிகழ்வில் முக்கிய நிகழ்ச்சியாக இசைப் போட்டி ஏற்பாடு செய்யப் படவுள்ளதால் 15-30 வயதுக்குட்பட்ட, யாழ் - பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட, இருபாலரும் பங்கேற்க முடியும். எனவே இப்போட்டியில் பங்கேற்க விரும்புபவர்கள் எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணப் பிரதேச செயலக கலாசாரப் பிரிவுடன் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெறுமாறு யாழ் - பிரதேச செயலர் கேட்டுக் கொள்கிறார். (ஓ)

## ஓ.எல் மாணவர்களுக்கான இலவச கல்விக் கருத்தரங்கு

(வட்டுக்கோட்டை)

க.பொ.த சாதாரண பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான இலவச கல்விக் கருத்தரங்கு தென்னிந்திய திருச்சபை அனைத்து சிறுவர் இல்லங்களின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

மேற்படி கருத்தரங்கில் இன்று புதன் கிழமை வரலாறு, தமிழ் ஆகிய பாடங்களுக்கான விளக்க கருத்தரங்குகள் காலை 9 மணியளவில் ஆரம்பமாகவுள்ளன.

நாளை வியாழக்கிழமை நாடகமும் அரங்கியலும் பாடத்திற்கு தோற்றும் மாணவர்களுக்கான நாடக ஆற்றுகை நிகழ்வு மாலை 2 மணிய ளவில் கல்லூரி உயர்தர கலைப் பிரிவு மாணவர்களால் மேடை யேற்றப்படவுள்ளது. இவ் நாடக ஆற்றுகை நிகழ்வில் "எந் தையும் தாயும்", 'மனமு' ஆகிய இரு நாடகங்களும் மேடையேற்றப்படவுள்ளன.

பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு என நாடகங்கள் மேடையேற்றப்படுவது இது முதற் தடவையாகும். எனவே மேற்படி கருத்தரங்குகளிலும் நாடக ஆற்றுகை நிகழ்விலும் அனைத்து சிறுவர் இல்ல மாணவர்களையும் மற்றும் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களையும் கலந்து கொண்டு பயன்பெறும் இக் கருத் தரங்கு 3 வாரங்களாக நடாத்தப்பட்டு வருவ தாகவும் இதனை ஏற்பாடு செய்த தென் னிந்திய திருச்சபை அனைத்து சிறுவர் இல்ல பொது முகாமையாளரும் யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியருமான அன்ரன் சந்திரன் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார். (ஓ-27)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

சரித்திரப் பிரசித்தி பெற்ற வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் வாரந்தோறும் இடம் பெறும் ஆன்மீக நிகழ்வில் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு *இதிஹாசங்கள்* எனும் தலைப்பில் சொல்வேந்தர் பொன் சுகந்தன் சொற் பொழிவாற்றவுள்ளார்(ஓ)

# வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்குக

## விவசாய சம்மேளனத் தலைவர் ஜனாதிபதிக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தத்தினால் அனைத்து விவசாயிகளுக்கும் பாரிய நஷ்டம் ஏற்பட்டுள்ளது. நெற் பயிர்கள் மட்டுமல்ல மேட்டு நிலப்பயிர்களும் முற்றாக அழிந்து விட்டன.

எனவே, பாதிக்கப்பட்டு அல்லலுறும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 25 000 ரூபா வீதம் நஷ்ட ஈடு வழங்குமாறு யாழ். மா வட்டத்தேசவள விவசாய சம்மேளனங்களின் சமாசத் தலைவர் க. முதலியார் ஜனாதிபதியை கோரியுள்ளார்.

சமாசத்தலைவர் வெள்ள அனர்த்தம் குறித்து ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள அவசரக் கடிதத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இம்முறை குடாநாட்டில் சுமார் 10 , 000 ஹெக்டேயர் பரப்பில் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டது. இதே வேளை 10,000க்கும் அதிகமான ஹெக்டேயரில் முந்திரிகை, வாழை, கத்தரி, தக்காளி, மிளகாய், புகையிலை போன்ற மேட்டு நிலப் பயிர்களும் உற்பத்தி செய்யப்பட்டன.

கடந்த வாரம் பெய்த மழை வெள்ளத்தினால் நெல் வயல்கள் அனைத்தும் நீரில் மூழ்கிக் கடல் போல் காட்சியளிக்கின்றன. இதேபோல், மேட்டு நிலப் பயிர்களும் நீரில் மூழ்கியதால் முற்றாக அழிந்துவிட்டன.

மழையுடன் வீசிய காற்றினால் பெரும் முதலீட்டுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள முந்திரிகைச் செய்கை, வாழைச்செய்கை எல்லாம் அழிந்து விட்டன. விவசாயத்தை நம்பி வாழ்ந்து வரும் சுமார் 60, 000 குடும்பங்கள் பாதிக்கப்பட்டு மீள முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

எனவே, பாதிக்கப்பட்டவர்களுக்கு தெம்பை ஏற்படுத்தும் வகையில் ஏக்கருக்கு 25, 000 ரூபா வீதம் நஷ்ட ஈடு வழங்கும்படி கேட்டுக் கொள் கின்றேன் என தெரிவித்துள் ளார். (ஓ-5)

## வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங்களின் சிறுவர்களுக்கு பசுப்பால் வழங்க 23 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலுள்ள வறுமைக் கோட்டுக்குட்பட்ட குடும்பங்களுக்கு பசுப்பால் வழங்குவதற்கென சிறுவர் பாதுகாப்பு அமைச்சு 23 மில் லியன் ரூ பாய் நிதி வ ழங்கியுள்ளதாக யாழ் . அரச அதிபர் க. கணேஷ் தெரிவித்தார்.

போசாக்கான உணவுகளை பிள்ளைகளுக்குப் பெற்றுக் கொடுக்க முடியாத வறுமைக் கோட்டுக்குட்பட்ட குடும்ப ங்களி லுள்ள சிறுவர்களுக்கு சமுர்த்தி திட்டத்தினூடாக பசுப்பால் வழங்கப்படுமெனவும் அவர் குறி ப்பிட்டுள்ளார்

எனினும், இந் நிதியிலிருந்து பசுப் பால் வழங்குவதற்கான முத்திரைகளை சமுர்த்தி அமைச்சு இதுவரை அனுப்பி வைக்கவில்லை எனவும் யாழ் . அரச அதிபர் தெரிவித்தார்.

இந் நிலையில் இத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முத்திரைகளை அனுப்பி வைக்குமாறு சமுர்த்தி அமைச்சுக்கு வேண்டுதல் கழகமொன்று அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

முத்திரைகள் கிடைக்கப் பெற்றவுடன் சகல பிரதேச செயலகப் பிரிவிலுள்ள வறுமைக் கோட்டுக்குட்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த சி றுவர்களுக்கு இலவசமாக பசுப்பால் வழங்கப்படுமெனவும் யாழ் அரச அதிபர் க .கணேஷ் மேலும் தெரிவித்தார். (5)

## பாதிக்கப் பெற்ற மாணவர்களின் விபரம் அறியத் தந்த அதிபர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

கடந்தவார இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப் பெற்ற கா.பொ.த சாதாரணதர பொதுப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் விபரங்களை நவம்பர் மாதம் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் யாழ் . வலயக்கல்விப் பணிப்பாளருக்கு அறியத் தந்த கல்லூரி அதிபர்களை இன்று புதன் கிழமை காலை 9மணிக்கு மீண்டும் யாழ். வலயக்கல்விப் பணிமனைக்கு சமுகமளிக்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப் பாளர் கேட்டுள்ளார்.

பாதிக்கப்பெற்ற மாணவர்களின் நன்மை கருதி உரிய நேரத்துக்கு சமுகமளிக்குமாறு அதிபர்கள் வேண்டப்படுகின்றனர். (ஓ)

## பரீட்சை அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக் கடமையில் ஈடுபடவுள்ள அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை காலை 9 மணிக்கு யாழ் . வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலையில் நடை பெறவு ள்ளதாக யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி. அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

எனவே இக் கூட்டத்திற்கு கோப்பாய் கல்விக் கோட்டம் தவிர்ந்த யாழ்ப்பாணம் , தீவகம் ,தென்மராட்சி ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு கடமையாற்றும் அலுவலர்கள் அனைவரையும் தவறாது சமூகமளிக்குமாறு யாழ் .வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஓ-5)

## உலக விஞ்ஞான தின வினாடிவினாப் போட்டி

(யாழ்ப்பாணம்)

உலக விஞ்ஞான தினத்தையொட்டி விஞ்ஞானதொழில் நுட்பவியல்அமைச்சின் அனுசரணையுடன் நல்லூர் பிரதேச செயலகத்தின் விதாதா வள நிலையம் நடத்தும் நல்லூர்க் கோட்டப் பாடசாலைக ளுக்கிடையேயான விஞ்ஞான வினாவிடைப் போட்டி நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு யா / இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது. பங்கு பற்றும் மாணவர்கள் குறித்த நேரத்திற்கு சமூகமளிக்குமாறு நல்லூர் பிரதேச செயலாளர் பா. செந்தில் நந்தனன் கேட்டுக் கொள்கிறார். (ஓ)

## மூத்தோருக்கான பண்ணிசை வகுப்பு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நல்லூர் தேரடி சித்தர் செல்லப்பா சுவாமிகளின் நினைவாலய மண்டபத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை, புதன்கிழமைகளில் நடாத்தி வரும் மூத்தோருக்கான தேவாரப் பண்ணிசை வகுப்புகளில் பஞ்சபுராணம் ஓதுவது நவலசந்திப் பண்கள் ஓதுவதும் பயிற்சியளித்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஓ)

## திறப்பு விழா

(வட்டுக் கோட்டை)

வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாசாலையில் உலக உணவுத்திட்டத்தினதும் தேசத்தை கட்டியெழுப்புவதற்கான அபிவிருத்திக்குமான அமைச்சின் உதவியுடனும் கட்டியெழுப்பப்பட்ட சமயலறைக் கட்டிடத் திறப்பு விழா இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு அதிபர். மா. செல்வராசா தலைமையில் இடம்பெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக சங்கானை கோட்டக் கல்விப்பணிப்பாளர் துரை எங்கரசு கலந்துகொள்ளவுள்ளார். (ஓ)

## யாழ்.செய்திகள்

## வர்த்தக ஸ்தாபனங்களின் சேத விபரங்களை அறியத் தருக

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் பல வர்த்தக ஸ்தாபனங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இப் பாதிப்புக்குரிய நஷ்டத்தை நிவர்த்தி செய்வதற்காக யாழ் அரசாங்க அதிபருக்கு விபரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளதால் ப ாதிக்கப்பட்ட வர்த்தக ஸ்தாபன உரிமையாளர்கள் தமது இழப்பு பற்றிய விபரங்களை இம் மாதம் 8ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு சமர்ப்பிக்குமாறு யாழ் வணிகர் கழகம் கேட்டுக் கொள்கிறது. (ஓ)

## ஒத்தி வைக்கப்பட்ட பரீட்சை மீண்டும் ஆரம்பம்

கல்வித் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவினால் கடந்த மாதம் 29ஆம் திகதி சனிக்கிழமை நடத்தப் பட விருந்த 10 தரங்களுக்குமான சமய அறிவுப் பரீட்சை இயற்கை அனர்த்தம் காரணமாக ஒத்திவைக்கபட்டது.

இப் பரீட்சை எதிர்வரும் 6ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வலயக் கல்விப் பணிப்பாளர்கள் , கோட்டக் கல்வி அதிகாரிகள் மற்றும் பாடசாலை அதிபர்களது முழுமையான ஒத்துழைப்புடன் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்த அனைத்து மாணவர்களும் தத்தமது பாடசாலைகளில் தவறாது பரீட்சைக்குத் தோற்றுமாறு யாழ் . மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவின் தலைவர் மு.செ. சரவணபவ அறிவித்துள்ளார். (ஓ-5)



வல்வை ஆதிகோவிலடி மக்கள் அமைப்புக்களின் அனுசரணையுடன் நடராசா கல்வி ஊக்குவிப்பு நிதியம் நடத்திய மாணவர் கௌரவிப்பு விழாவில் வல்வெட்டித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் பி. கிறிஷ்ணானந்தன் வல்வை சிவகுரு வித்தியாலய மாணவி சி. மகாலெட்சுமிக்கு மாலை அணிவித்து கௌரவிப்பதையும்த சி. சசிகரன் அ.உதய குமாரிக்கு சான்றிதழ் வழங்குவதையும் த திருமதி. சி. சிவ ரஞ்சினி வல்வை சிதம்பராகல்லூரி மாணவனான ம.மயூரனுக்கு சான்றிதழ் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# இலங்கையில் தமிழர் 1

### அறிமுக உரை

உலகில் மிக நீண்டகால மனிதவரலாற்றைப் பெற்றுள்ள நாடுகளுள் ஒன்று இலங்கை. இருபதாம் நூற்றாண்டின் நடுவில் இலங்கை ஒரு சுதந்திர நாடாகத் தோற்றம் பெறும் வரை பல்லாயிரம் ஆண்டுகளாகப் பல்வேறு பண்பாடுகளைச் சேர்ந்த மக்கள் இந் நாட்டில் குடியேறி வந்துள்ளனர். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து பன்மைப் பண்பாடுடைய ஒரு நாடாக இலங்கை காணப்பட்டது. வரலாறு தோன்று முன் வாழ்ந்த பல்வேறு இனக் குழுக்களிலிருந்து ஏறத்தாழ 2500 ஆண்டுகளுக்கு முன் இரு பேரினக் குழுக்கள் ஆக்கம் பெறத் தொடங்கின. சிங்களர் மற்றும் தமிழர் ஆகிய இந்த இரண்டு இனக் குழுக்களுடன் வேறும் பல இனக் குழுக்கள் அக் காலகட்டத்தில் இலங் கையில் வாழ்ந்தன. இவை காலப் போக்கில் நாட்டின் இரண்டு பேரினக் குழுக்களுள் கலந்து விட்டன. பிற்காலத்தில், முஸ்லிம் வணிகர் வருகை யுடன் மூன்றாவது முக்கிய இனக்குழு ஒன்று உருவாகத் தொடங்கியது. இக்குழு இன்று இலங்கை முஸ்லிம்கள் என அடையாளங் காணப்படுகின்றது. பதினாறாம் நூற்றாண்டிலிருந்து இலங்கை ஐரோப்பியர் ஆட்சிக்கு உட்பட்டதன் விளைவாக மேலும் ஓர் இனக்குழு, பறங்கியர் (Burghers) எனப்படும் குழு, இலங்கையில் தோற்றம் பெற்றது. ஐரோப்பியர் ஆட்சியின்போது இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட இந்துனீசியப் போராளிகள் மேலும் ஒரு சிறு இனக் குழு, மலாய் இனக்குழு, உருவாகுவதற்குக் காரணமாயிருந்தனர். இறுதியாக, பிரித்தானியருடைய ஆட்சியின் போது பெருந் தோட்டப் பயிர்ச் செய்கை மூலம் பொருளியல் நலன்களைப் பெற எடுக்கப்பட்ட முயற்சிகள் இன்னொரு முக்கிய இனக்குழுவாகிய இந்திய 'வம்சாவழி'த்தமிழர் இடம் பெறவழி வகுத்தன.

### இலங்கைத் தமிழர் இனக்குழு அடையாளம்

ஆதி வரலாற்றுக் காலத்தில் வாழ்ந்த பேரினக்குழுக்களின் தோற்றத்தையும் பரிணாம வளர்ச்சியையும் படிப்படியாகக் காண முயல்வது ஒரு கடினமான முயற்சியாகும். முதலில், இனக்குழு என்ற சொல்லுக்கும் இனக்குழுப் பெயர்களுக்கும் வரைவிலக்கணம் வழுங்குவது இலகுவான செயலாகாது. இக் காலத்தில் ஆங்கிலத்தில் பரவலாக வழக்கிலுள்ள சொல்லாகிய ethnic என்ற சொல் குறித்து நிற்கும் பொருளிலேயே இந் நூலின் இனக்குழு என்ற சொல் பயன் படுத்தப்படுகின்றது. இனக்குழு என்பது ஆங்கிலத்தில் (ethnic group) எனப்படும் குழுவுக்கு மட்டுமின்றி, தமிழில் பரந்த ஒரு பொருளில் பொதுவாக வழங்குகிறது என்பதை மறுக்க முடியாது. இதனால், (ethnic) என்ற ஆங்கிலச் சொல் கொண்டுள்ள இறுக்கமான குறுகிய பொருள் இனக்குழு என்ற சொல்லுக்கு இல்லை எனலாம். இனம் என்பது மனித வர்க்கம் மற்றும் சாதி என்ற பல்வேறு பொருளுடைய சொல்லாகப் பொது வழக்கில் இருக்கின்றது. இந்நூலைப்

**பேராசிரியர் கா. இந்திரபாலா**

பொறுத்த மட்டில், இனம் என்ற சொல் ஆங்கிலத்தில் (race) என்ற சொல் கொண்டுள்ள பொருளாகிய மனித வர்க்கம் என்ற சொல்லாகவும், இனக்குழு என்ற சொல் (ethnic group என்ற ஆங்கிலச் சொற்களுக்குச் சமமான சொல்லாகவும் கையாளப்படுவது கவனிக்கத்தக்கது.

இன்றைய உலகில் இனக்குழுப் பெயர்கள் பரவலாக வழக்கில் உள்ளன. எனினும் அவற்றுக்குத் தெளிவான வரைவிலக்கணம் வழங்குவது ஒரு பிரச்சனையாகும். தமிழர், சிங்களவர், அறபு மக்கள் என்ற இனக்குழுப் பெயர்கள் குறித்து நிற்கும் மக்கள் யார் என்பதை இலகுவில் விளக்க முடியாது. உலகச் செய்தித் தாள்களில் ஒவ்வொரு நாளும் அரபு இஸ்ரேலியப் பிரச்சினை பற்றிய செய்திகள் வெளி வருகின்றன. ஆனாலும், அரபுஎன்ற சொல் யாரைக் குறிக்கின்றது என்பது தெளிவாகக் கூறக் கூடியதா, அதேபோல, தமிழர் மற்றும், சிங்களவர் என்ற பெயர்களை இலகுவில் நாம் விளங்கிக் கொண்டாலும், அவற்றுக்குத் தெளிவான விளக்கம் கொடுக்க முடியுமா?


ஆங்கிலத்தில் வழங்கும்( ethnicity) என்ற சொல்லை இனத்துவம் இன இயல்பு இன அடையாளம் இன மரபு என்று பலவாறு தமிழில் பெயர்க்கலாம் ஒருவருடைய இனத்துவம் என்பது அவருடைய சமூகம் சார்ந்த பண்பை அல்லது இயல்புகளைக் குறித்து நிற்கும். அச் சொல்லை அவருடைய உடல் சார்ந்த பண்பைக் குறிக்கும் சொல்லாகக்கொள்ள முடியாது .இனக்குழு (ethnic group) எனப்படும் குழுவுக்குரிய பண்புகளாக பின்வருவன பலரால் ஏற்றுக் கொள்ளப் படுகின்றன. (தொடரும்)



அண்மையில் வட்டு யாழ்ப்பாணம் கல்லூரியில் நடைபெற்ற "நத்தார்" பண்டிகை இன்னிசை ஆராதனை நிகழ்ச்சிகளில் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டிருப்பதனை படங்களில் காணலாம். (படங்கள் கோபி)

# சமூக நிறுவனங்களுக்கான நிர்வாகமும் முகாமைத்துவமும் 8

பயிற்றப்பட்டவர்களை அமைப்புடனேயோ தொடர்ந்தும் வைத்துக் கொள்ளும் வகையில் ஒரு கொள்கையை அமைப்பு உருவாக்கிக் கொள்ள வேண்டும். உதாரணமாக கணக்குப்பதிவுசெய்பவர் அல்லது உள்ளக்க் கணக்காய்வாளரை இழப்பது



சமூக மட்ட நிறுவனங்களுக்கு பெரிய இழப்பாகும். ஆகையால் இவர்களை சங்கத்திலேயே தொடர்ந்தும் வைத்துக் கொள்வதற்கான சிறந்த வழிவகைகளை கண்டறிதல் வேண்டும்.

5. சிலசந்தர்ப்பங்களில் நிறுவனங்கள் குறுகிய கால ஒப்பந்த அடிப்படையில் வெளியில் இருந்து துறைசார் நிபுணர்களின் சேவையை பெறவேண்டிய தேவை ஏற்படும். இது ஒரு விசேடமான வேலையை நிறைவு செய்வதற்காக இருக்கும்.

இதன் போது முடிந்த வரைக்கும் அந்த நிபுணரைப் பயன்படுத்தி குறித்த விடயத்தில் உங்கள் அமைப்பின் உறுப்பினர்கள் சிலருக்கு அடிப்படைப் பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்கும் பயன்படுத்த முயற்சிக்க வேண்டும். இது எதிர்காலத்தில் அமைப்பின் உறுப்பினர்களையோ உபயோகித்து இதே வேலையைச் செய்ய உதவும்.

இது நிர்வாகமும் முகாமைத்துவத்தின் கீழ் அமைப்பிற்குத் தேவையான தலைமைத்துவம், நிர்வாகக் குழுவினர் கடமைகள் பொறுப்புக்கள், அணியாகச் செயற்படல், வேலைப்பகிர்வு என்பவற்றுடன் மனித வள முகாமைத்துவம் போன்ற மனித வளம் தொடர்புபட்ட விடயங்களைப் பார்த்தோம். அடுத்து இவற்றோடு சம்பந்தப்பட்டதான அமைப்பு முகாமைத்துவம் அலுவலக முகாமைத்துவம் ஆகியவற்றைப் பார்க்கலாம்.

**3.1 திட்டமிடல் (planning)**

திட்டமிடல் என்பது

- ❖ என்ன செய்யப்பட வேண்டும்
- ❖ எப்போது செய்யப்பட வேண்டும்.
- ❖ எவ்வாறு செய்யப்பட வேண்டும்.
- ❖ யார் அதைச் செய்வது.
- ❖ வேறு யார் யார் இதில் உதவி செய்ய வேண்டும்.
- ❖ செய்வதற்கு என்ன வளங்கள் தேவை.
- ❖ இறுதி வெளியீடாக என்ன எதிர்பார்க்கப்படுகின்றது.

என்பவற்றை எதிர்வு கூறும் நடைமுறையாகும்.

திட்டமிடல் ஒரு மிகவும் உயர்மட்டத்திலான நுட்பமான விடயம் அல்ல. அது ஒரு எளிமையானதும் அதே நேரத்தில் சமூக அமைப்புக்களுக்கு மட்டுமன்றி ஒவ்வொரு தனிநபருக்கும் மிக முக்கியமானதுமாகும். நாம் நாளாந்தம் ஒவ்வொரு வேலையைத் திட்டமிட்டே செய்து முடிக்கிறோம்.

பொதுவாக இன்று, நாளை, இவ்வாரம், அடுத்தவாரம், அடுத்த மாதம் என்ன செய்ய வேண்டும் என நாம் திட்டமிட்டே நடைமுறைப் படுத்துகிறோம். சிலர் தங்களுடைய தனிப்பட்ட இலக்கை அடைய 5அல்லது10 வருடங்கள் திட்டமிடுவதும் உ ண்டு நீங்கள் இலங்கை அல்லது வேறு ஒரு நாட்டின் மிக வெற்றிகரமான ஒரு தனிநபரின் வரலாற் றை வாசிப்பீர்கள் ஆயின், அவர்கள் எல் லோரும் தங்கள் இலக்கை அடைய திட்டமிட்டு அதன்படி நடந்து இருப்ப தனால் தான் அந்த உச்சத்தை அடைந் திருப்பதனை உணர்வீர்கள். அவர்கள் அவ்வாறு புகழ் பெறக் காரணம் அவர்களின் திட்டமிடும் திறனேயாகும்.

இவ்வாறான புகழ்பூத்த மனிதர்களின் வரலாறு எங்களுக்கு இரண்டு செய்திகளைக் கூறுகின்றது. ஒன்று, குறிக்கப்பட்ட இலக்கை எட்டுவதற்கு எங்களை நாங்கள் திட்டமிடுதல் அவசியம். இரண்டாவது இலக்கை நோக்கித் திட்டமிட்டவாறே இயங்குதல் அவசியம். ஆகையால் சமூகமட்ட நிறுவனங்களும் தங்களின் திட்டமிடும் திறனை அபிவிருத்தி செய்வதுடன் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கான ஈடுபாடும், திறனும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இதன் மூலம் அமைப்பின் வெற்றிக்காக அனைவரும் உழைப்பதற்கான அடிப்பணடையை கட்டியெழுப்ப முடியும்.

ஒரு சாத்தியமான செயற்றிட்டம் அமைய வேண்டும் எனில் அது சில முக்கியமான அங்கத்தவர்களையும் ஊழியர்களையும் வைத்துக் கொண்டு திட்டமிடுவதனால் எட்டப் பட முடியாது.

அவ்வாறில்லாமல் அனைத்து உறுப்பினர்களினதும் பங்களிப் பினையும் பெற்றுக் கொண்டு தயாரி க்க ப் படும் திட்டமே சிறந்ததாக அமையும்.

அவ்வாறு செய்வதற்கான சந் தர்ப்பம் இல்லாதவிடத்து செயற் திட்டம் செயற் குழுவினரால் அபிவிருத்தி செய்யப் பட்டு, மற்றவர்களுடன் பகிரப்பட்ட அனைவ ராலும் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

சமூக அடிப்படை அமைப்பிற்காக அபிவிருத்தி செய்யப்படும் செயற்திட்டத்தில் பின்வருவன அடங்கியிருக்க வேண்டும்.

1. புரதான செயற்பாடுகளும் அதனோடு இணைந்த உபசெயற்பாடுகளும்.
2. எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள்.
3. குறித்த நடவடிக்கைகளுக்கு பிரதான பொறுப்பாக இருப்பவர்.

**தி.திருசாந்**
**SOND நிறுவனம்**
**யாழ்ப்பாணம்**

4. பிரதான பொறுப்பாக இருப்பவருக்கு உதவி செய்யத் தேவைப்படுவோரும் உதவிகளும்.
5. பிரதான செயற்பாடுகளும் உபசெயற்பாடுகளுக்குமான கால வரையறை.
6. பிரதான, உப செயற்பாடுகளுக்கான தேவையான வளங்கள், இருக்கும் வளங்கள், ஏனைய வளங்களுக்கான வழிவகைகள். (தொடரும்)

# வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு
# ஆய்வு அபிவிருத்திப் பிரிவு

## மாதிரி வினாத்தாள் -05 கணிதம் - II

நேரம் :- 2 மணித்தியாலம்

### பகுதி - A
### விரும்பிய 5 வினாக்களுக்கு மட்டும் விடை தருக

**வினா இல. 1**


(அ) கூட்டல் விருத்தி ஒன்றின் முதல் உறுப்பு 3, பொது வித்தியாசம் -2 எனின்,
(i) 12 ம் உறுப்பைக் காண்க. (3 புள்ளிகள்)
(ii) முதல் n உறுப்புக்களின் கூட்டுத்தொகை Sn இனால் கொடுக்கப் படுமாயின் **Sn** $= n(4-n)$ எனக் காட்டுக (3 புள்ளிகள்)

(ஆ) உண்டியல் ஒன்றில் முதல் நாள் ரூ3/- ஐ இட்டு சேமிப்பை ஆரம்பிக்கும் ஒருவர், தொடர்ந்து வரும் ஒவ்வொரு நாளும் முதல் நாள் இட்ட பணத்தின் இருமடங்கை இட்டு சேமிக்கும் பழக்கத்தைக் கொண்டுள்ளார் எனின் 11ம் நாள் எவ்வளவு பணத்தை உண்டியலில் இட்டிருப்பார்? (4 புள்ளிகள்)

**வினா இல. 2**

$AB = 6.5cm, A\hat{B}C = 120°, AB // CD, CD = 7cm$ ஆக உள்ள நாற்பக்கல் ABCD ஐ வரைக. B இலிருந்து 4.5cm செங்குத்துத் தூரத்தில் நேர்கோடு CD அமைந்துள்ளது. AB ஐ B இல் தொடுவதும் BC ஐ நாணாகவும் கொண்ட வட்டத்தை வரைந்து இதன் ஆரையை அளந்து எழுதுக. (10 புள்ளிகள)

**வினா இல. 3**




$O$ ஐ மையமாகவுடைய வட்டத்தில் $A\hat{O}D = 120°$ எனின்,

(i) $A\hat{C}D$ இன் பெறுமானத்தைக் காண்க. (1 புள்ளி)
(ii) இம்முடிவினைப் பெறுவதற்கு பயன்படுத்திய தேற்றத்தை தெளிவாகக் கூறுக. (2 புள்ளிகள்)
(iii) $\Delta ACD$ ஒரு செங்கோண முக்கோணி எனக் காட்டுக. (1 புள்ளி)
(iv) DC = 5cm ஆகவும் AC = 12cm ஆகவும் இருப்பின் வட்டத்தின் ஆரையைக் காண்க. (3 புள்ளிகள்)
(v) AC//BD எனின் $2O\hat{C}B = C\hat{O}D$ என நிறுவுக. (3 புள்ளிகள்)

**வினா இல. 4**


P என்ற புகையிரத நிலையத்திலிருந்து $030°$ திசைகோளிலிருந்து 80 km தூரத்தில் B என்ற புகையிரத நிலையமும் P இலிருந்து $300°$ திசைகோளில் A என்ற புகையிரத நிலையமும் உண்டு. B இலிருந்து $242°$ திசைகோளில் A உள்ளது.

**பின்வருவனவற்றிற்கு விடை தருக.**

(அ) (1) 1000000 cm : 1cm என்னும் அளவிடைக்கு புகையிரத நிலையங்களின் அமைவிடத்தைக் காட்டும் படத்தை தெளிவாக வரைக. (4புள்ளிகள்)
(ii) A இலிருந்து P இற்கான திசைகோள் யாது? (1 புள்ளி)
(iii) வரைபடத்தில் AP இன் நீளத்தைக் காண்க. (1 புள்ளி)
(iv) புகையிரத நிலையம் A, P இற்கிடைப்பட்ட தூரத்தை km இல் தருக. (2 புள்ளிகள்)

(ஆ) A இலிருந்து புறப்பட்ட புகையிரதம் இடையே தரிக்காது P ஐச் சென்றடைய 50 நிமிடங்கள் எடுத்தால், புகையிரதத்தின் கதியைக் காண்க.

**வினா இல. 5**




PQRS ஓர் செவ்வகமாகும். $PQ = 12cm, QR = 5cm$ ஆகும். A,B என்பன முறையே PS, PQ என்பவற்றின் நடுப்புள்ளிகள் ஆகும்.

**பின்வருவனவற்றிற்கு விடை தருக.**

(i) SQ இன் நீளம் யாது? (2 புள்ளிகள்)
(ii) AB இன் நீளம் யாது? (1 புள்ளி)
(iii) ABOS ஓர் இணைகரம் எனக் காட்டுக. (5 புள்ளிகள்)
(iv) இணைகரம் எனக் காட்டுவதற்கு நீர் பயன்படுத்திய தேற்றத்தை தெளிவாகக் கூறுக. (2 புள்ளிகள்)

**வினா இல. 6**

30 நிறுவனங்கள் ஒரு மாதத்தில் பயன்படுத்திய மின்சாரஅலகுகள் தொடர்பான தரவு கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. பின்வருவனவற்றிற்கு விடை தருக.

| மின்சார அலகுகள் | 100-105 | 106-110 | 111-115 | 116-120 | 121-125 | 126-130 | 131-135 |
|---|---|---|---|---|---|---|---|
| நிறுவனங்களின் எண்ணிக்கை. | 1 | 5 | 6 | 8 | 5 | 3 | 2 |

(i) ஆகார வகுப்பைக் காண்க (1 புள்ளி)
(ii) ஆகார வகுப்பாயிடையின் நடுப்பெறுமானத்தை உத்தேச இடையாகக் கொண்டு மாதம் ஒன்றில் நிறுவனம் பயன்படுத்தும் மின்அலகுகளின் உண்மை இடையை கிட்டிய முழு எண்ணில் காண்க. (7 புள்ளிகள்)
(iii) 120 மின் அலகுகளிலும் அதிகமாகப் பயன்படுத்திய நிறுவனங்களின் எண்ணிக்கையை முழுநிறுவனங்களின் சதவீதமாகத் தருக. (2 புள்ளிகள்)

### பகுதி B
### விரும்பிய 5 வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

**வினா இல. 1**

(அ) கமல் என்பவர் 18% எளிய வட்டிக்கு ரூ. 75 000/- ஐ கடனாகப் பெற்றார். 5 வருட முடிவில் செலுத்த வேண்டிய மொத்தத் தொகை யாது? (3 புள்ளிகள்)
(ஆ) விமல் என்பவர் அதே தொகையை, அதே வட்டி வீதத்திற்கு, வங்கியில் கூட்டு வட்டி முறையில் வைப்பிலிட்டால் 5 வருட முடிவில் பெறப்படும் தொகை யாது? (7 புள்ளிகள்)
( $A = P(1+\frac{r}{100})^n$ என்னும் சூத்திரத்தைப் பயன்படுத்துவதோடு. கணிப்பிற்கு மடக்கை அட்டவணையையும் பயன்படுத்துக.)


**வினா இல. 2**

(i) $1-x, x, (x-1)^2$ என்பவற்றின் பொ.ம.சி ஐக் காண்க. (2 புள்ளிகள்)
(ii) சுருக்குக. $\frac{2}{(x-1)^2}+\frac{1}{x(1-x)}$ (4 புள்ளிகள்)
(iii) காரணியாக்குக. $9ax-4y+6ay-6x$ (4 புள்ளிகள்)

**வினா இல. 3**

(அ) $(x+5)^2 = 12$ என்னும் சமன்பாட்டைத் தீர்க்க. (4புள்ளிகள்)
(ஆ) இரு எண்களின் கூட்டுத்தொகை 19. அவற்றில் பெரிய எண்ணின் இருமடங்கிற்கும் சிறிய எண்ணிற்குமிடையிலான வித்தியாசம் 17 ஆகும்.
(i) பெரிய எண் x எனவும் சிறிய எண் y எனவும் கொண்டு மேற்படி த்தகவலைக் காட்ட ஓர் ஒருங்கமை சமன்பாடு அமைக்க. (2 புள்ளிகள்)
(ii) அவ்வொருங்கமை சமன்பாட்டைத் தீர்ப்பதன் மூலம் இருஎண்களையும் காண்க. (4புள்ளிகள்)

**வினா இல. 4**



படத்திலுள்ள வளையியை அவதானித்து பின்வருவனவற்றிற்கு விடை தருக.
(i) வளையியின் சமச்சீர் சமன்பாடு யாது? (1புள்ளி)
(ii) வளையியின் இழிவுப் பெறுமானம் என்ன? (1)
(iii) திரும்பற் புள்ளியின்ஆள்கூறுகளை எழுதுக. (2)
(iv) $y = 2$ ஆகும்போது x இன் பெறுமானங்களைக் காண்க. (2 புள்ளிகள்)
(v) தரப்பட்ட வளையியின் சமன்பாடு $y = (x+1)(x-3)$ எனின் அதனை $y = (x+a)^2 + b$ என்ற வடிவிற்கு மாற்றப்படும்போது, இன் பெறுமானங் களைக் காண்க. (4 புள்ளிகள்)

**வினா இல. 5**

(அ) 1,2,3,4,5,6,7,8 என இலக்கமிடப்பட்ட ஒழுங்கான எண்முகித் தாயக்கட்டை ஒன்று சுண்டப்படும்போது, நிலத்தைத் தொடும் எண் குறிக்கப்படுகிறது.
(i) பெறப்படும் நிகழ்ச்சிகளைக் காட்டும் மாதிரி வெளி S ஐ எழுதுக (1 புள்ளி)
(ii) இரட்டைஎண் ஒன்று பெறுவதற்கான நிகழ்ச்சித்தொடை A எனின் P(A) ஐக் காண்க. (2 புள்ளிகள்)

ஆ) பெட்டி A இல் 2 நீலப்பந்துகளும், 3 சிவப்புப் பந்துகளும் உள்ளன. பெட்டி B இல் 3 நீலப்பந்துகளும் 1 சிவப்புப் பந்தும் உள்ளன. பந்துகள் யாவும் ஒரே அளவானவை. ஒரே தன்மையானவை. பெட்டி A இலிருந்து ஒரு பந்து எழுமாற்றாக எடுக்கப்பட்டு நிறம் குறிக்கப்பட்ட பின்னர் பெட்டி B இல் இடப்படுகிறது. பெட்டி B இலிருந்து ஒரு பந்து எழுமாற்றாக எடுக்கப்பட்டு நிறம் குறிக்கப்பட்ட பின்னர் பெட்டி A இனுள் இடப்படுகிறது.

**பின்வருவனவற்றிற்கு விடை தருக.**

(i) மேற்போந்த தகவலைக் காட்டும் மரவரிப்படம் ஒன்று வரைக. (2 புள்ளிகள்)
(ii) அதில் நிகழ்தகவுகளைக் குறித்துக் காட்டுக. (3 புள்ளிகள்)
(iii) எடுக்கப்பட்ட இரு பந்துகளும் சிவப்பு நிறமாக இருப்பதற்கான நிகழ்தகவு யாது? (2 புள்ளிகள்)

**வினா இல. 6**

(அ) பெறுமானங் காண்க. $\sin 30° \cos 60° + \cos 30° \sin 60°$ (3 புள்ளிகள்)
(ஆ) வீதியின் இரு ஓரங்களிலும் அமைந்துள்ள இரு உயரமான கம்பங்களில் ஒன்று, மற்றையதிலும் **20m** உயரமானதாகும். இரு கம்பங்களின் அடிகளையும் இணைக்கும் கோட்டில் குறித்த ஒரு இடத்திலிருந்து நோக்கும் போது உயரம் கூடிய கம்பத்தின் ஏற்றக்கோணம் $60°$ ஆகவும் உயரம் குறைந்த கம்பத்தின் ஏற்றக்கோணம் $40°$ ஆகவும் காணப்பட்டது. உயரம் குறைந்த கம்பத்தின் அடியிற்கும் நோக்குநருக்கும் இடைப்பட்ட தூரம் **12 m** ஆகும்.
(i) இத்தரவுகளை வரிப்படத்தில் குறித்துக் காட்டுக. (3 புள்ளிகள்)
(ii) இரு கம்பங்களின் உயரங்களையும் காண்க (4 புள்ளிகள்)

# விசேட தேவைக்குரியவர்களை வளப்படுத்தும் யாழ். மாவட்டத்தின் கல்வி வாய்ப்புக்கள்

**இன்று (டிசம்பர் -3) சர்வதேச விசேட தேவைக்குரியோர் தினம்**

விசேட தேவைக்குரியோர் என்னும் சொல் அங்கவீனர் அல்லது வலது குறைந்தோர் அல்லது ஊனமுற்றோர் எனும் பழைய சொற்பதங்களுக்கு பதிலீடான ஓர் புதிய கலைச்சொல் ஆகும்.

மாற்று ஆற்றலுள்ளோர் அல்லது மாற்று வலுவுடையோர் போன்ற சொற்களும் இதனை ஒத்த கருத்தில் பாவிக்கப்படும் சமகால புதிய சொற்களாகும். இவர்களுக்கும் கல்வி வழங்கி இவர்களையும் பெறுமதிமிக்க பிரஜைகளாக்க வேண்டியது யாவரின் கடமையாகும். அதற்குரிய வாய்ப்புக்கள், வளங்கள் யாழ் மாவட்டத்தில் எவ்விதம் உள்ளன என்பது பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் சென்ற 2007 ஆம் ஆண்டு முதல் உட்படுத்தல் கல்வி (Inclusing Education) விசேட தேவைக்குரியோாரின் பொருட்டு நடைமுறைக்கு இடப்பட்டுள்ளது.

அண்மையில் யாழ். வலயக்கல்வித் திணைக்களத்தினால், திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையில் விசேட தேவை கல்வி நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

விசேட தேவைக்குரியோர் தொடர்பிலான வினைத்திறன் மிக்க கல்விச் செயற்பாடுகளை ஒருங்கிணைக்கப்படுவதில் இந்த நிலையம் பொறுப்பாயுள்ளது.

இவர்களை இவர்களுக்குரிய கல்வி நிலையங்களில் இல்லங்களில் வைத்துக் கற்பிக்கப்படும் முறைக்கு மாற்றாக இப் புதிய அணுகு முறை பின்பற்றப்படுகிறது.

கல்வி அமைச்சு மகாகாணக் கல்வித் திணைக்களங்களின் ஊடாக இப்புதிய அணுகு முறையை நடைமுறைப்படுத்தியுள்ளது.

ஏனெனில் பொதுச் சமூக நீரோட்டத்திலிருந்து இவர்களை தனித்து வைப்பது அவர்களின் பூரணத்துவ வளர்ச்சிக்கு பாதிப்பை உண்டு பண்ணுகிறது. ஆதலால் இவர்களை இயலுமானவரை சாதாரண பாடசாலைச் சூழலில் வைத்து சமூகத்துடன் இணைந்ததாகக் கல்வி வழங்குதல் வேண்டும்.

இதன் மூலம் அவர்கள் சமூகச் சூழலில் பழக்கப்படுவதுடன் பண்பாட்டு விழுமியங்களையும் கற்றுக்கொள்ளமுடியும்.

இந்த நோக்கங்களுக்காகவே உட்படுத்தல் கல்வி நடைமுறைக்கு இடப்பட்டுள்ளது.

பாடசாலைகளிலிருந்து பொருத்தமான ஆசிரியர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு விசேட பயிற்சிகளும் திறன் விருத்தி அரங்கம் (WorkShop) மூலம் வழங்கப்பட்டு வருகிறது. சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் இதற்குரிய நிதியளிப்பை செய்து வருகின்றன.



யாழ். தேசிய கல்வியியல் கல்லூரியில் விசேட தேவைக்குரியோர் கல்விக்கென தனியான விரிவுரையாளர் உள்ளார். இவர் ஆசிரிய மாணவர்களை இக்கல்வியையும் வழங்கக்கூடிய வகையில் தயார் செய்கின்றார்.

எமது யாழ். குடாநாட்டில் இயற்கை, விபத்து, போர், மனிதநடவடிக்கைகள் போன்ற பல காரணங்களால் விசேட தேவைக்குரியோர்களின் தொகை வருடாந்தம் கூடிச் செல்கிறது. ஆகவே இவர்களுக்கும் பாடசாலைக் கல்வி, தொழில் கல்வி போன்றவற்றை அளித்து வர வேண்டியது முழுசமூகத்தினதும் கடமையாகும். அதன் மூலம் இவர்களையும் உழைத்து வாழக்கூடிய மனிதர்களாக உயர்த்த முடியும். ஏனையோர்களுக்கு சுமையாக இருக்காமலும் அரசின் சமூக நலச் செலவீடுகள் இன்றியும் இவர்களை பயனுள்ளவர்களாக மாற்ற முடியும்.

விசேட தேவைக்குரியோரின் கல்விச் செயற்பாடுகளுக்கு உதவும் பொருட்டும் சிறுவர் பாதுகாப்பும் இலங்கை, (UNICEF, CARE) போன்ற சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களும் உள்ளூர் நிறுவனங்களும் பல வித உதவிகளை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

அரச பொதுநிர்வாகத்தில் பிரதேச செயலர்கள், உதவி அரச அதிபர் பணிமனைகளில் சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் மூலம் வதிய விசேட தேவைக்குரியோருக்கு பின்வரும் உதவிகள் வழங்கப்படுகின்றன. மூக்குக்கண்ணாடி, காது கேட்கும் கருவி, சக்கர நாற்காலி (Wheel Chair), முச்சக்கரவண்டி (Tricycle), செயற்கைக் கால் சார்புறுப்பு, வெள்ளை பிரம்பு ஊன்று தடி, பொதுசன மாதாந்த உத விப் பணம் இவை இவர்களின் இயல் பான நடமாட்டத்திற்கு உதவிகல்விச் செயற்பாட்டிற்கும் உதவுகின்றது.

சிறுவர்களுக்கு மட்டும் சிறப்பாக கடமையாற்ற பின்வரும் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளன. சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர் (P.O) சிறுவர் நன் நடத்தை - நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், முன்பிள்ளைபருவ அபிவிருத்தி உதவியாளர், சிறுவர் உரிமை மேம்பாட்டு உதவியாளர் (CRPA) இவர்களையும் அணுகியும் விசேட தேவை க்குரியோர் கல்வித் தேவைகளுக்கு பொருத்தமான உதவிகளை பெறமுடியும்.

பின்வரும் நிறுவனங்கள், இல்லங்கள் விசேட தேவைக்குரியோர் தொடர்பில் மட்டும் யாழ். மாவட்டத்தில் கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

### நாவீல்ட் பாடசாலை

கைதடியிலுள்ள இப்பாடசாலையே யாழ். மாவட்டத்தில் உள்ள பழைமையான நிறுவன அமைப்பாகும். 1956ஆம் ஆண்டு முதல் இயங்கிவரும் இது அரச ஆதரவு பெற்ற தனியார் பாடசாலையாகும். இங்கு முற்றிலும் வாய்பேசாதோர், காதுகேளாதோர்களுக்கு சைகை மொழி மூலம் பயிற்றப்பட்ட ஆசிரியர்களினால் கற்பிக்கப்பட்டுவருகிறது. பார்வையற்றவர்களுக்கு பிறெயில் எழுத்து முறை மூலம் கல்வி வழங்கப்பட்டுவருகிறது.

இங்கு மாணவர்களுக்கு சகல வசதிகளும் உடைய விடுதி வசதி இலவசமாக வழங்கப்படுகிறது.

இங்கு கல்வி கற்ற பலர் பல்கலைக்கழகத்தினால் பட்டப்படிப்பு, பட்டப்பின்படிப்புகளை நிறைவுசெய்து அரச சேவையில் பலவித பதவிகளை வகித்து வருவது குறிப்பிடத்தக்கது.

### (Ark) ஆர்க்

உடுவில் பிதேசத்தில் கிறிஸ்தவ கன்னியாஸ்திரிகளால் மனவளர்ச்சி குறைந்த சிறார்களுக்காக நடத்தப்பட்டுவரும் ஓர் இல்லம் இதுவாகும். இங்கு சமய பாகுபாடின்றி சிறுவர்கள் அனுமதி பெறு கின்றனர்.

இலவசமாக உணவு, உடுதுணி, இருப்பிடக் கல்வி, பொழுதுபோக்கு, சுகாதார வசதிகள் வழங்கப்படுகின்றது.

கல்வியுடன், பண்பாட்டு விழுமியங்களும் வளர்க்கப்படுகின்றது.

### சிவ பூமி இல்லம்

கோண்டாவிலில் இவ் இல்லம் உள்ளது. சிவபூமி அறக்கட்டளை நிலையத்தினால் நடாத்தப்படுகிறது. இங்கு சமயப் பாகுபாடு இன்றி மனவளர்ச்சி குறைந்த சிறார்கள் பகல்நேரம் மட்டும் பராமரிக்க ப்படுகின்றார்கள். சிறுவர்கள் சிவபூமி இல்லம் பஸ் மூலம் வீடுகளிலிருந்து இங்கு ஏற்றிவரப்படுகின்றார்கள். பொருத்தமான கல்வி முறை வழங்கப்படுகின்றது.

**திருமதி. சற்குணஸ்வரி தபேந்திரன்**
ஆசிரியை,
யாழ். கைதடி குருசாமி வித்தியாலயம்,
கைதடி.

### வாழ்வகம்

உடுவிலில் கண்பார்வை ஓரளவு குறைந்த முற்றிலும் பார்வையற்ற சிறார்களுக்காக இது இயங்குகிறது. அமரர் செல்வி. பா. சின்னத்தம்பி அவர்களின் அர்ப்பணிப்பு மிக்க உழைப்பினால் தோற்றிவிக்கப்பட்டு வளர்க்கப்பட்டது. இங்கு சிறுவர்களுக்கு சகல அடிப்படைவசதிகளும் இலவசமாக வழங்கப்படுகின்றது. மாணவர்களின் கணனி, கவின் கலை போன்ற தனித்துவத் திறமைகள் இனங்காணப்பட்டு வளர்க்கப்படுகிறது சிறப்புக்குரியது. விசேட தேவைக்குரிய சிறார்களை வீடு களில் மறைத்துவைக்கும் பழக்கம் இன்றும் எம்மிடையே இருக்கத்தான் செய்கிறது. இது வருந்தத்தக்கது. சமூக விழிப்புணர்வை ஊடகங்கள் கட்டி யெழுப்புவதன் மூலம் இவர்களையும் உற்பத்தித்திறன் வாய்ந்த பொருளாதார சக்திக ளாக மாற்றிவிடமுடியுமல்லவா?

# வாரம் ஓர் யாழ்ப்பாணத்து மூலிகை

### பிரண்டை

Botanical Name - Cissus quadrangularis
Family- Vitaceae
Engl - Bone - Setter
Sinh - ltiressa

இது ஏராளமான கிளைக் கொடிகளுடன் பல தூரம் வரைக்கும் வேலி, சிறுசெடி, மரம் ஆகியவற்றின் மேல் நன்கு நெருக்கமாகப் படர்ந்து வளரும். நல்ல பச்சை நிறச் சதுரமான கொடியில் 8, 10 செ.மீ. இடை வெளியில் கணுக்கள் காணப்படுகின்றன. கணுக்கள் கொடியை விடச் சிறுத்துக் குறுகலாக இருக்கும். கொடியிலுள்ள நான்கு வரம் புகளும் உயர மானவை. அதாவது கொடியின் நான்கு பக்கங்களிலும் லேசான பள்ளங்களுண்டு வரம்புகளில் கருமை நிறக்கோடுகளைக் காணலாம். கணுவிற்கு ஒன்றாக மாறி மாறி அமைந்துள்ள இலை சிறிது விருத்த வடிவமும், தடிப்பும், பச்சை நிறமும், உடையது. ஒவ்வொரு கணுவிலும் சிற்நிலையும், பற்றுக் கொடியுமுண்டு. கொடியின் உற்புறத்தில் நல்ல பச்சை நிறத்தையும், அதிக நாரும் காணப்படுகின்றன. இளங்கொடி - நுனிக் கொடி மட்டுமே நாரற்று ஒடியக் கூடியது.

### பரம்பலும், இனவிருத்தியும்

பொதுவாக வெப்பமான இடங்களில் அதிகமாகக் காணலாம். யாழ் மாவட்டத்தில் தரிசு நிலங்களில் பொதுவாக பரம்பலை அவதானிக்கலாம். கணுவுள்ள துண்டுகளை நட்டு பயிரடலாம்.

### சத்துக்கள் :

100 கிராம் பிரண்டையில் உள்ள சத்துக்கள் (கிராமில்)

புரதம் 1.2, கொழுப்பு 0.3, நார்ப்பொருள் 1.8, மாச்சத்து 7.3, கல்சியம் 650 மி.கி, பொஸ்பரஸ் 50 மி.கி, இரும்பு 2.1 மி.கி, உயிர்ச்சத்து C யும் காணப்படும்.

### மருத்துவப் பயன்கள்

❖ இதன் இலைகளைக் கலவைக் கீரையுடன் சேர்த்து சமைத்து சாப்பிட அஜீரணம் தீரும். மலத்தை இளக்கும்.

❖ நாரில்லாத இளம் நுனிக்கொடியில் ஒரு துண்டை எடுத்து, அத்துடன் வல்லாரை, புளியாரை, கொத்தமல்லிக்கீரை, புதினா இவற்றில் ஏதாவது ஒன்றிரண்டு இன இலைகளைச் சேர்த்து, அத்துடன் தேங்காய், தக்காளி, கரட் சேர்த்து பச்சையாக சட்னி செய்து உண்ண உடலுக்கு வலுவைத் தரும். குடற் புழுக்களை கொல்லும் தன்மையும் உண்டு.



❖ பிரண்டையை இடித்து சாறுபிழிந்து அத்துடன் புளி, உப்பு சேர்த்துக் காய்ச்சி குழம்புபதம் வரும் சமயம் இறக்கி சூடு தாங்கு மளவுக்கு பற்றுப்போட சுளுக்கு, சதை பிரளுதல், எலும்பு முறிவினால் ஏற்பட்ட வீக்கம் தீரும். அடிபட்ட வீக்கத்திற்கும் இதனை பற்றிடலாம்.

**"சதை பிரண்டலும், சரி செய்திடும் பிரண்டை" என்பது ஒரு பழமொழி. அனுபவ மொழியாகும்.**

இளந்தண்டை இலையுடன் உலர்த்திப் பொடித்து, பாலில் கலந்து சிறிது கற்கண்டு சேர்த்து அருந்த உடலைத் தேற்றி வன்மையைக் கொடுக்கும்.

இதன் வேர்களை சேகரித்து உலர்த்திப் பொடித்து 2 கிராம் அளவு காலை, மாலை அருந்தி வர முறிந்த என்புகளை பொருந்தலைக்கும் தன்மையை ஏற்படுத்தும். இதையே வெந்நீரில் குழைத்து மேலுக்குப் பற்றிடலாம். இதன் ஆங்கிலப் பெயர் Bone setter என்பதும் குறிப்பிடப்படவேண்டும். இம்முறை இன்னும் சில பரம்பரை வைத்தியர்களால் பயன்படுத்தப் பட்டும் வருகின்றது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

பிரண்டையின் மருத்துவப் பயன்களில் 'பிரண்டை உப்பு' முக்கியமான மருத்துவப் பிரயோக முறையாகும்.

பிரண்டைச் செடிகளை சேகரித்து உலர்த்தி சுத்தமான சிமெண்ட் தரையில் கொளுத்தி சாம்பல் எடுக்கவும். இந்த சாம் பலில் 1 லீற்றரை மண்சட்டியில் எடுத் துக் கொண்டு அத்துடன் 3 லீற்றர் தண்ணீர் சேர் த்து கலக்கி 12 மணி நேரம் தெளிய வைக் கவும். தெளிந்த நீரை வேறொரு மண் சட்டி யில் இறுத்து பின்பு நன்கு கலக்கவும். இவ்வாறு 2 அல்லது 3 முறை செய்தபின் தெளிந்த பிரண்டை சாம்பல் நீரை எடுத்து அடுப்பிலிட்டு சிறு தீயைக் கொண்டு காய்ச்சி குழம்பு பதத்தில் பீங்கான் தட்டில் ஊற்றி குளிரவைத்துப் பார்க்க உப்பு பல கட்டிகளாக தோன்றியிருக்கும். இதுவே பிரண்டை உப்பு எனப்படும்.

❖ குழந்தைகட்கு உண்டாகும் அஜீரண பேதி சீதபேதிக்கு அரிசி உணவு பிரண்டை உப்பை பாலில் கலந்து 3 வேளை கொடுக்கத் தீரும்.

**டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)**
சிரேஷ்டவிரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி

❖ வாய்ப்புண், வாய்த்துர்நாற்றம், உதடு, நாக்கு வெடிப்புகளுக்கு தினம் இரு வேளை 2 முதல் 3 அரிசி எடை பிரண்டை உப்பை வெண்ணெயில் சாப்பிட வேண்டும்.

❖ குடல் பகுதியிலுண்டாகும் புண்கள், வயிற் றெரிவு, மூலநோய் போன்றவற்றிற்கு குன்றி மணியளவு பிரண்டை உப்பை நெய்யில் சேர்த்து 40 நாட்கள் சாப்பிடத் தணியும்.

❖ ஆண்களுக்கு உண்டாகும் நரம்புத்தளர்ச்சி, விந்து இழப்பு, பலவீனம் ஆகியவற்றிற்கு நன் றாக அரைத்த சாதிக்காயுடன் பிரண்டை உப் பை நெய்யில் கலந்து தினம் 3 வேளை வீதம் ஒரு வாரம் சாப்பிட வேண்டும்.

❖ இதன் தண்டுச்சாறு முரசிலிருந்து இரத்தம் வடியும் நிலைமையை கட்டுப்படுத்தும் (Scurvy) இதில் உயிர்ச்சத்து C சத்து இருப்பதும் குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

# குருப் பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

## 06.12.2008 முதல் 08.12.2009 வரை

## விருச்சிகம்

விசாகம் 4-ஆம் பாதம் ,அனுஷம், கேட்டை வரை

(பெயரின் முதல் எழுத்துக்கள் தோ, ந,நே, நோ, ய,யி, யு, தே உள்ளவர்களுக்கும்)

### வெற்றிச் செய்திகள் வீடு சேரும்!

கனவு பலிதத்தையும், வாக்குப் பலிதத்தையும் கைவந்த கலையாகப் பெற்றிருக்கும் விருச்சிக ராசி அன்பர்களே!

இதுவரை உங்கள் ராசிக்கு இரண்டில் சஞ்சரித்து வந்த குருபகவான் இனி மூன்றாம் இடத்தில் சஞ்சரித்து முன்னேற்றத்தை வழங்கப்போகிறார். வருமானம் இரு மடங்காகும். வைப்பு நிதி உயரும். தர்மகாரியங்களிலும் ஆர்வம் காட்டுவீர்கள். தைரியமும் தன்னம்பிக்கையும் கூடும். குருவின் பார்வை பலத்தால் தொட்ட காரியம் எல்லாம் வெற்றி பெறும். தொழில் வளர்ச்சி கூடும். வெற்றி வாய்ப்புகள் வீடு தேடி வந்து சேரும். முக்கிய மானவர் வரிசையில் இருந்த நீங்கள் இனி மிக முக்கியமானவர் வரிசையில் இடம்பிடிக்கப்போகிறீர்கள்.

குருவின் பார்வை உங்கள் ராசிக்கு 7,9,11 ஆகிய இடங்களில் பதிவதால் வாழ்வில் வரும் மாற்றங்கள் வளர்ச்சியைக் கூட்டும் விதத்திலேயே இருக்கின்றன. குணத்தில் தங்கம் என்று வர்ணிக்கப்பட்ட நீங்கள் கொடுப்பதிலும் வள்ளல் என்றும் மாறப்போகிறீர்கள். பணம் பலவழிகளிலும் வந்து பையை நிரப்பும். இனத்தார் பகை மாறவும் இயல்பாகவே நலம் வந்து சேரவும் குருப்பெயர்ச்சிக்கு முன்னதாகவே குரு வழிபாட்டினை முறையாக மேற்கொள்ளுங்கள்.

### புகழ் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டவர்கள்!

எல்லோரிடமும் இனிமையாகப் பேசுவதில் உங்களுக்கு நிகர் யாரும் இல்லை. பழகிய மறு நிமிடமே பாசத்தால் மனதில் இடம் பிடித்து விடுவீர்கள். ஆன்மீக ஈடுபாடு அதிகம் கொண்டிருப்பதால் தான் உங்கள் வாக்கும் பலிக்கிறது. கனவும் பலிக்கிறது.

கற்ற கல்வியை விட பெற்ற அனுபவமே பெரிதும் உங்களுக்கு கைகொடுக்கும். பழய சடங்கு சம்பிரதாயங்களில் அதிக நம்பிக்கை வைப்பீர்கள். பதவிக்கும் பணத்திற்கும் மயங்காமல் உதவிக்கும் உண்மைக்கும் உறு துணையாக இருப்பீர்கள்.

கோபம் வரும் பொழுது உங்களை சமாதானப்படுத்துவதே என்பது இயலாத காரியம். வருமானத்திற்கு ஏற்றபடி வாழ்க்கை நடத்தினால் தான் மன அமைதி கிடைக்கும் என்று அடிக்கடி சொல்வீர்கள் உங்கள் யோச னையைக்கேட்டு நடந்தவர்கள் வாழ்வில் வெற்றி மீது வெற்றி பெறுகிறார்கள் என்ப தால் உங்களைச் சுற்றி ஒரு பெரும் கூட்டம் இருக்கும்.

இப்படிப்பட்ட குணாதிசயங்களை பெற்ற உங்களுக்கு இந்த குருப்பெயர்ச்சி தரும் குதூகலமான மாற்றங்களைப் பற்றி பார்ப்போம்.

முப்பெரும் பார்வையால்
ஏற்படும் முன்னேற்றம்!
மன்னவன் மூன்றில் நிற்க
மாபெரும் மாற்றம் தோன்றும்!
எண்ணிய காரியங்கள்
எல்லாமே வெற்றி பெறும்!
தன் நம்பிக்கையுடன்
தைரியமும் இணைந்திருக்கும்!
மண்ணில் புகழ் பரவும்!
மகத்தான வாழ்வு வரும்!

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும்பொழுது மூன்றாம் இடத்தில் சஞ்சரிக்கும் குருவால் முன்னேற்றங்கள் அதிகரிக்கப்போகிறது. சொத்துப்பிரச்சினைகள் சுமூகமாக முடியவும் சொந்த -பந்தங்கள் செய்யாத உதவியை நண்பர்கள் செய்வார்கள். தன்னம் பிக்கையும் தைரியமும் தான் உங்கள் மூலதனமாக அமையும்.

### விருப்பங்களை நிறைவேற்றும் வியாழனின் பார்வை

குருபார்க்க கோடி நன்மை என்று முன்னோர்கள் சொல்லி வைத்திருக்கிறார் கள். அதிக பலன்களைத் தரும் குரு உங்கள் ராசிக்கு தனபாக்கியாதிபதியாக விளங்குவதால் தனபாக்கிய யோகம் அதன் பார்வை படும் இடங்களுக்கெல்லாம் வருகிறது. நீச்சம் பெற்று பார்த்தாலும் உச்சமான வாழ்க்கையை அது கொடுக்கும்.

ஏழாம் இடத்தை குரு பார்ப்பதால் திரு மண முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் வரண்கள் வாயில் தேடிவந்துகொண்டே இருக்கும். குடும்பப்பிரச்சினைகள் தீரும். கொடுக்கல் -வாங்கல்கள் ஒழுங்காகும். வாழ்க்கைத் துணை வழியில் வரவு வந்து சேரும். உங்களுக்கும் உங்கள் வாழ்க்கைத்துணைக்கும் ஒப்பற்ற விதத்தில் இலாபம் தரும் தொழில்கள் அமையும். பிள்ளைகளாலும் உதிரி வருமானங்கள் பெருகும். குருவின் பார்வை 9ஆம் இடத்தில் பதிவதால் தந்தை வழியில் தகுந்த ஒத்துழைப்பு கிடைக்கும் சிந்தை மயங்காமல் சிரித்து மகிழ வாய்ப்புக்கிட்டும். சகோதர வழியில் ஏற்பட்ட சச்சரவுகள் அகலும். பெரிய இடங்களில் எல்லாம் உங்கள் பெயர் பரிசீலிக்கப்பட்டு உங்களுக் குரிய மரியாதைகள் தந்து பார்க்க வருவார்கள் . பிரிந்த தம்பதியர் ஒன்று சேருவர்.

குருவின் பார்வை உங்கள் ராசிக்கு 11ஆம் இடத்தில் பதிவதால் இலாபம் இரு மடங்காக வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் இடமாற்றம் பெற்றுக் கொண்டு விரும் பிய தொழிலை செய்ய முன் வருவர். கடல் பயண வாய்ப்பு கைகூடும். இடம் ,பூமி வாங்குவதாலும் இலாபம் கிடைக்கும் தொழில் தொடங்க கேட்ட இடங்களில் இருந்து தொகை வந்து சேரும். வங்கிகளில் சேமிப்பு வளர்ந்து கொண்டே செல்லும்.

### ஐந்துக்கு அதிபதி மூன்றில்!

புத்திய ஸ்தானாதிபதியாக விளங்கும் குரு

**ஜோதிடக் கலைமணி சிவல்புரி சிங்காரம்**

சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகள் மூலம் பெருமை சேரும். அவர்களால் வருமானமும் வந்து குவியும். வழக்குகளில் வெற்றி கிட்டும். வருங்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். குருவின் சாரபலம் அறிந்து வழிபாடுகளை மேற்கொள்வதன் மூலமும் தனாதிபதியின் அம்ச நிலை பார்த்து அதற்கேற்ற விதத்தில் தனம் தரும் எண் ஆதிக்கத்தில் உங்கள் பெயரை அமைத்துக்கொள்வதன் மூலமும் பண மழையில் நனையும் வாய்புக்கிட்டும்.

### தொழில் வளர்ச்சி கூடும் நேரம்!

(6.12.2008 முதல் 19.1.2009 வரை)

சூரியன் சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது தொழில் வளர்ச்சி மேலோங்கும் ஒரு தொழில் ஆரம்பிப்போர். மறு தொழில் தொடங்கும் வாய்ப்புக்கிட்டும். வாகனயோகம் வந்து சேரும். வருங்கால நலன் கருதி புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். அரசு வழியிலும் அனு கூலம் கிடைக்கும். முன்னோர் வழி சொத்துக் களை முறையாகப்பிரித்து விற்பனை செய்வ தன் மூலம் வரும் தொகையில் புதிய சொத் துக்களை வாங்குவீர்கள். எடுத்த காரியங் களை எளிதில் முடித்து காட்டுவீர்கள். கொடுத்த வாக்கையும் காப்பாற்றி மகிழ்வீர்கள்.

### வாய்ப்புகள் வாசல் கதவை தட்டும் நேரம்!

(20.1.2009 முதல் 21.3.2009 வரை)

சந்திரன் சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது பூர்வ புண்ணியத்தால் உங்களுக்கு கிடைக்கவேண்டிய பலன்கள் அனைத்தும் வந்து சேரும். நாடாளும் நபர்களின் நட்பால் நன்மைகளைக் காண்பீர்கள் புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் வாய்ப்பு கிடைக்கும். வழக்குகளில் வெற்றி காண்பீர்கள் பாராட்டும்,புகழும் கூடும். தொழில், உத்தியோகத்தில் இருந்த எதிரிகள் விலகுவர்.உதிரி வருமானங்கள் பெருகும்.

### வசந்த காலம் வந்து சேரும்!

(22.3.2009 முதல் 8.12.2009 வரை)

செவ்வாய் சாரத்தில் குரு சஞ்சரிக்கும் போது ஆரோக்கியம் சீராகும். அதிகப்பொறுப்புக்கள் வந்து சேரும். கொடுக்கல் -வாங்கல்களை ஒழுங்கு செய்துகொள்வீர்கள். ஆடை -ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த மின்னியல் உபகரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும் .தலைமைப் பதவிகள் தானே வந்து சேரும். 1.5.2009 முதல் 15.8.2009 வரை கும்பராசியில் குரு உலா வரும்பொழுது இடமாற்றம் , ஊர்மாற்றம், வீடுமாற்றங்கள் ஏற்பட்டாலும் சுய ஜாதகம் பார்த்து முடிபெடுப்பதே நல்லது.

### கூடுதல் விழிப்புணர்ச்சி காட்டவேண்டிய நேரம்!

(29.6.2009 முதல்12.11.2009 வரை)

குரு வக்ர கதியில் இயங்கும் இக்காலத்தில் எதையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து செய்வது நல்லது. தன வரவு வந்தாலும் வந்த உடனே செலவாகி விடும். பிள்ளைகளின் கல்வி நலன் கருதியும் கடல் பயணம் கருதியும் செலவிடுவீர்கள். வாகனப் பழுதுகள் ஏற்படலாம் . புதிய வாகனம் வாங்க நினைப்பவர்கள் அதிஷ்ட எண் ஆதிக்கத்தில் வாங்குவது நல்லது. ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்தினால் ஆரோக்கியம் சீராகும். இக்காலத்தில் குரு வழிபாட்டில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

### விருச்சிக ராசிப்பெண்களுக்கு!


விருச்சிகராசியில் பிறந்த பெண்களுக்கு நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறுவதற்கான வாய்ப்புக்கிட்டும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். கணவன் , மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும் . எதிர்பார்ப்புகள் நிறைவேற்ற இல்லத்தில் உள்ளவர்கள். ஒத்துழைப்பு செய்வர். மதிப்பும் மரியாதையும் உயரும். உடல் எங்கும் ஆபரணங்களைச் சூட்டி அழகு பார்க்கும் வாய்ப்புக்கிட்டும். உறவினர் பகை அகலும். வியாழன் தோறும் விரதமும் தென்முகக்கடவுள் வழிபாடும் மேற் கொள்வதோடு பௌர்ணமி கிரிவலத்திலும் கலந்து கொண்டு பலன் காணுங்கள். நலன் தரும் நந்தி பாடலைப்பாடி பிரதோஷ வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். உங்கள் சிந்தனைகள் அனைத்தும் வெற்றி பெறும்.

### பலன் தரும் வழிபாடு!

மூன்றாம் இடத்தில் சஞ்சரிக்கும் குருவால் முன்னேற்றங்கள் அதிகரிக்கவும்.வேண்டிய நற்பலன்களை அள்ளித்தரும் விநாயகரை வழிபட்டு வளர்ச்சி மீது வளர்ச்சியைக் காணுங்கள்.

வளரும்

# வானத்தில் தோன்றிய அபூர்வ காட்சி நிலவின் அருகே வியாழன்-வெள்ளி



(யாழ்ப்பாணம்)

வானத்தில் நிலவின் அருகே வியாழன் மற்றும் வெள்ளி கிரகங்கள் ஆபூர்வமாக தோன்றின. இதை ஏராளமான மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்து மகிழ்கிறார்கள்.

நேற்று முன்தினம் இரவு வானத்தில் அதிசய காட்சி தென்பட்டது.

நிலவின் அருகே 2 கிரகங்கள் பிரகாசமாக தோற்றம் அளித்தன. நிலவின் ஒரு பகுதி, மனித முகத்தின் வாய் போலவும், அதற்கு மேலே தோன்றிய இரு கிரகங்களும் கண்கள் போலவும் இருந்தன.

இந்த அதிசய காட்சியை பலரும் ஆர்வத்துடன் பார்த்தனர். நிலவின் அருகே தோன்றிய கிரகங்கள் வியாழன் மற்றும் வெள்ளி என்பது தெரியவந்தது.

புதன், வெள்ளி, பூமி, செவ்வாய் ஆகியவை உள்கோள்கள் என்றும் வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன், புளூட்டோ ஆகியவை வெளிக்கோள்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.

நேற்று முன்தினம் இரவு சந்திரனின் இடது புறம் நல்ல பிரகாசமான ஒளியுடன் காணப்பட்டது, வெள்ளி (வீனஸ்) கோள் ஆகும். இது சூரியன் மறைந்த பிறகு நிலவில் இருந்து மேல் புறத்தில் தெரியும். நிலவின் உயரே வலது புறத்தில் தோன்றியது வியாழன் கோள் ஆகும். இது வெள்ளியை விட பிரகாசம் குறைவாக இருந்தது.

இதேவேளை வானத்தில் தோன்றிய இந்த அதிசய காட்சி பற்றி சென்னையில் உள்ள பிர்லா கோள் அரங்கம் தெரிவித்துள்ளது.

வானத்தில் தோன்றிய இந்த காட்சி அதிசயம் அல்ல. நிலவும் இரு கோள்களான வெள்ளியும் வியாழனும் தான். வேறு ஒன்றும் இல்லை.

சந்திரன் பூமியை சுற்ற 291 / 2 நாட்கள் ஆகும். வியாழன் சூரியனை சுற்றி வர 12 வருடம் ஆகும். வெள்ளி சூரியனை சுற்றிவர 224 நாட்கள் ஆகும்.

இவை இப்படி அருகருகே வருவது வருடத்திற்கு ஒரு முறை நடைபெறும். இக்காட்சி இந்த வருடம் கடந்த சில நாட்களாகவே தெரிகிறது. ஆனால் வானம் மேக மூட்டமாக இருந்தால் நம்மால் சரியாக பார்க்க முடியாமல் இருந்தது. நேற்று முன்தினம் வானம் தெளிவாக இருந்ததால் இந்த காட்சி கண்களுக்கு தெரிகிறது. (ஓ-5)

# நளினியின் மேன்முறையீட்டு மனு ஒத்திவைப்பு

நளினியின் அப்பீல் மனு மீதான விசாரணையை பெப்ரவரி 9ஆம் திகதிக்கு சென்னை உயர் நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

முன்னால் பிரதமர் ராஜீவ் கொலை வழக்கில் நளினிக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு பின் ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது. வேலூர் சிறையில் நளினி உள்ளார். தண் டனைக்காலத்தைக் குறைத்து முன் கூட்டி விடுதலை செய்ய நளினி கோரினார்.

மத்திய அரசு விசாரித்த வழக்குகளில் தண்டனையைக் குறைத்து முன்கூட்டி விடுதலை செய்ய முடியாது எனக்கூறி நளினியின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

இதைத் எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றில் நளினி தாக்கல் செய்த மனுவை நீதிபதி நாகமுத்து தள்ளுபடி செய்தார்.

இந்த உத்தரவை எதிர்த்து மேன்முறையீட்டு மனுவை நளினி தாக்கல் செய்துள்ளார். மேன் முறையீட்டு மனுவை தலைமை நீதிபதி கங்குலி , நீதிபதி இப்ராகிம் கலிபுல்லா அடங்கிய முதல் பெஞ் விசாரித்தது. இதன் இறுதி விசாரணையை பெப்பரவரி 9ஆம் திகதிக்கு ஒத்து வைத்தது. (ச-5)

மனித இனம் பெருந்தன்மையானதுதான். ஆனால் மனிதர்கள் சிறுமையுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

– ஸ்பெயின்

வலம்புரி

## யாழ்ப்பாணத்தில் பெருகிய வெள்ளம் இரு தரப்பு மீது குறை கூறப்படுகிறது

யாழ்ப்பாணத்தில் பொழிந்த கடும் மழை காரணமாக ஏற்பட்ட பெரு வெள்ளம் ஒருபோதும் இல்லாத இயற்கையின் சீற்றமா? என்ற கேள்விக்கு புயல் காற்று வழமைக்கு மாறானது.

ஆனால் மாரி காலத்தில் மழை பெய்வது வழமையான ஒன்று. மழை நீர் கடலுக்குச் செல்வதற்கு உரிய ஏற்பாடுகள் இருந்திருந்தால் இந்தளவு தூரம் வெள்ளம் பெருகியிருக்க மாட்டாது எனப் பலரும் கூறுகின்றனர்.

எதற்கும் விமர்சனங்கள் இருக்கவே செய்யும். அந்த விமர்சனங்கள் நியாயமானவையாயின் அதனை ஏற்றுக்கொள்வது மனிதப் பண்பாகும்.

அவ்வகையில் வெள்ளம் பெருகி வீடுகளுக்குள் தண்ணீர் வருவதற்கான காரணம் தொடர்பில் இரு தரப்பு மீது குற்றம் சுமத்தப்படுகிறது.

அதில் படைத்தரப்பினர் முதலாவது இடத்தையும் உள்ளூராட்சி அமைப்புகளான பிரதேச சபைகள், நகர, பட்டின சபைகள், மாநகர சபை போன்றவை இரண்டாவது இடத்தையும் குற்றப்பத்திரத்தில் இடம் பிடித்துள்ளன.

யாழ்.குடாநாட்டிலுள்ள வெள்ள வாய்க்கால்கள் அடைக்கப்பட்டு அதில் காவலரண்கள் கட்டப்பட்டுள்ளன.

இதைத் தவிர மழை வெள்ளம் கடலில் சேரக்கூடிய வாய்க்கால்களும் அடைக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக வெள்ளம் வழிந்தோட முடியாமல் போயிற்று. படைத்தரப்பும் தொடர்ந்தும் வெள்ள வாய்க்கால்களை மண்மூடை போட்டு தடுக்குமாயின் சிறிய மழை பெய்தால் கூட யாழ்.குடாநாட்டில் வெள்ளம் பெருகும் என்பது பொது மக்களின் கருத்து.

வெள்ளம் வழிந்தோடக் கூடிய இடங்களைப் படைத்தரப்பினர் தடை செய்ததினால் வெள்ளம் தேங்கியதற்கு காரணம் என்பதுடன் உள்ளூராட்சி அமைப்புகள் தங்கள் எல்லைக்குட்பட்ட வடிகால்களை ஒழுங்கான முறையில் சீரமைக்கவில்லை –அவற்றைப் பராமரிக்கவில்லை எனப் பொதுமக்கள் கூறுகின்றனர்.

எத்தனையோ வெள்ள வடிகால்களில் செடிகள் முளைத்து நிற்கின்றன. மேற்பார்வையாளர்கள், சுத்திகரிப்பாளர்கள் தங்கள் கடமைகளைச் செய்யவில்லை.

சபைகளின் பொறுப்பான அதிகாரிகள் இது விடயத்தில் எந்த அக்கறையும் கொள்ளவில்லை என்பது பொதுமக்களின் பலமான குற்றச்சாட்டு.

இந்தக் குற்றச்சாட்டுக்களைக் கூறிக் குறை காண்பது நோக்கமல்ல.

மாறாக இன்னுமோர் தடவை இத்தகைய அவல நிலை ஏற்படாமல் நிலைமையைச் சமாளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தாகவேண்டும் என்ற நன்னோக்கில் இவ்விடயம் இங்கு பிரஸ்தாபிக்கப்படுகின்றது.

எனவே மேற்கூறப்பட்ட இரு தரப்பினரும் நிலைமையை நேரில் பார்த்தவர்கள் அவர்கள் இன்னுமோர் அவலநிலை ஏற்படுவதை அனுமதிக்க மாட்டார்கள் எனக் கருதுகின்றோம்.

படைத்தரப்பினர் உடனடியாக வெள்ள வடிகால்களை இடைமறித்து அடுக்கியுள்ள மண்மூடைகள், மரக்குற்றிகளை அகற்றி வெள்ளம் வடிந்தோடச் செய்வதுடன், உள்ளூராட்சி சபைகள் வெள்ள வடிகால்களைத் திருத்தும் பணியை முடுக்கி விடுவதும் கட்டாயமானதாகும்.

# வன்னி மக்களுக்கு அரசு பொருட்கள் அனுப்பும்; எந்த நாடும் எமக்கு கட்டளையிட முடியாது

## இப்படிக்கூறுகிறார் அமைச்சர் மஹிந்த சமரசிங்க

(கொழும்பு)

வன்னியில் வாழ்கின்ற மக்களும் எமது மக்களே அவர்களுக்குத் தேவையானதை நாமே மேற்கொள்கின்றோம்; பொருட்களையும் அனுப்பி வைக்கின்றோம். எந்த நாடும் எமக்கு கட்டளையிட முடியாது என்று அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

மர நிழல்களில் மக்கள் வாழவில்லை. பாழடைந்த அல்லது கைவிடப்பட்ட வீடுகளில் இருக்கின்றனர் என்பதுடன் மனித உரிமை உயர்ஸ்தானிகராலயம் எமக்குத் தேவையில்லை என்று அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மனித உரிமைகள் அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் பதிலளித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எந்த நாடும் எமக்கு கட்டளையிட முடியாது. எமது மக்களுக்கு நாமே பொருட்களை அனுப்பி வைப்போம் 700 மெற்றிக்தொன் உணவுப்பொருட்களை அரசாங்கம் அனுப்பி வைத்துள்ளது. நாளாந்தம் அனுப்பி வைக்கப்படுகின்ற பொருட்கள் தொடர்பில் எதனையும் நாம் குறிப்பிடவில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்காக 8 ஆயிரம் லொறிகளில் 11 ஆயிரம் மெற்றிக்தொன் உணவுப்பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பிரதேசத்தின் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ள வேண் டும் ஐ.ந அமைப்புக்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்க முடியாது என்று கூறிய அதேவேளை , டபிள்யு. எச்.ஓ ., யு.என்.எச்.சீ.ஆர். ஆகிய நிறுவனங்களுக்கு அனு மதி வழங்கினோம்: எனினும் , அவர்களும் வவுனியாவுக்கு வந்துவிட்டனர். மருந்துப்பொருட்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இறுதிக்காலாண்டுக்குத்தேவையான பொருட் கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மரநிழல்களில் மக்கள் இல்லை

பாழடைந்த அல்லது கைவிடப்பட்ட வீடுகளில் இருக்கின்றனர். பாம்புகள் மொனராகலையிலும் , ஏன்? இங்கு கூடத்தான் இருக்கின்றன. கல்லாறு பகுதியில் அதிகாலையில் குண்டுகளை வீசியதில் சிறுவர்கள் பலியாகியுள்ளனரா என்று ஐ.நா.விலிருந்து என்னுடன் தொடர்பு கொண்டு கேட்ட னர்.

எனினும், திருமங்கலத்தில் உள்ள புலிகளின் விமானப்படை பயிற்சி முகாம் மீதே தாக்குதல் நடத்தப்பட்டதாக பாதுகாப்பு தரப்பினர் தெரிவித்திருந்தனர்.

அந்த முகாமைத்தாக்கியதற்காக விமானப்படையி னரை குறை கூற முடியாது அந்த விமானங்கள் மூலமாகவே தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன என்பதுடன் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் எமக்குத் தேவை யில்லை .ஜனாதிபதி சட்டமா அதிபரை பாதுகாக்கின்றார் என் பதில் எவ்விதமான உண்மையும் இல்லை என தெரிவித்தார். (ஓ)

# சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவில் இருந்து கருணா தரப்பு பிரதிநிதிகள் நீக்கம்

(கொழும்பு)

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவில் உள்ள தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பிரதிநிதி கருணா தரப்பினரா பிள்ளையான் தரப்பினரா என்பதில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் அதிகரித்திருக்கும் படுகொலைச் சம்பவங்களை கண்டிக்கும் வகையில் தற்காலிகமாக சர்வகட்சிக் பிரதிநிதிகள் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளா திருக்கப்போவதாக தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பொதுச்செயலாளர் எனக் கூறப்படும் கைலேஸ்வர ராஜாவும் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனும் கூறியிருந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சர்வகட்சிப்பிரதிநிதிகள் குழு கூடியது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி சார்பில் கருணா தரப்பில் பிரதிநிதிகள் இருவர் சென்றிருந்தனர்.

இதனால் குழப்பமடைந்த சர்வகட்சி நிதிகள் குழு தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் உண்மையான தலைவர் மற்றும் பொதுச்செயலாளர் யார் என்பதை அறியத்தருமாறு தேர்தல்கள் செயலகத்திடம் கோரியது.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவர் நந்தகோபால் எனவும் பொதுச்செயலர் கைலேஸ்வரராஜா எனவும் தேர்தல்கள் செயலகம் சர்வகட்சிப்பிரதிநிதிகள் குழுவுக்கு அறிவித்தது.

இதனைத்தொடர்ந்து கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக வந்திருந்த கருணா தரப்பு பிரதிநிதிகள் இருவரையும் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு திருப்பி அனுப்பியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, கட்சியின் தலைமைத்துவம் தொடர்பாக ஏற்பட்டிருக்கும் குழப்ப நிலை தொடர்பாக தான் விரைவில் தீர்மானம் எடுக்கவிருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் கருணா என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள் ளார். (5)

# ஆசிரியர்களுக்கு செயலமர்வு

(கொழும்பு)

புதிய கல்வி மறுசீரமைப்புக்கு ஏற்ப கணிப்பீடு , மதிப்பீடு சுகாதாரமும் உடற்கல்வியும் பாடத்தின் தரம் 8 ற்கான ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியை நடைமுறைப்படுத்தல் தொடர்பான செயலமர்வு ஒன்று மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில் நாளை வியாழக் கிழமை முதல் 6 ஆம் திகதி சனிக்கிழமை வரை மூன்று தினங்களுக்கு இச்செயலமர்வு நடைபெறவுள்ளது.

புதிய கல்வி மறுசீரமைப்புக்கு ஏற்ப 2008ஆம் ஆண்டு முதல் பாடசாலைகளில் 6,7,10,11 ஆகிய தரங்களில் தேர்ச்சிகளை முதன்மையாகக்கொண்ட செயற்பாடுகள் மூலம் கற்றல், கற்பித்தல் முறைகள் நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

இந்த அணுகுமுறைகள் குறித்த கணிப்பீடு ,மதிப்பீடு தரம் 8 ஆசிரிய அறிவுரைப்பு வழிகாட்டியை நடைமுறைப் படுத்துவது என்பது தொடர்பான செயலமர்வே 3 தினங்க ளுக்கு நடைபெறவுள்ளது.

அழைப்பு விடுக்கப்பட்டுள் ளவர்கள் செய்முறைச்செயற் பாடுகளில் ஈடுபடுவதற்கு தயாராக வருதல் வேண்டும் என் றும் செயலமர்வில் பங்குபற்றும் ஆசிரியர்களுக்கு தேசிய கல்வி நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு வழங்கப்படும் எனவும் தேசிய கல்வி நிறுவக உடற்கல்வித் துறையின் தலைவர் மங்கலிக்கா வீரசிங்க அறிவித்துள்ளார்.(5)

# பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடைத் துணிகள்

(கொழும்பு)

2009ஆம் கல்வியாண்டுக்கென பாடசாலை மாணவர்களுக்கும்,பிக்கு மாணவர்களுக்கும் விநியோகிப்பதற்காக இலவச சீருடைத்துணிகளை ,சகல வலயக்கல்வி அலுவலகங்களுக்கும் கல்வி அமைச்சு தற்போது அனுப்பி வைத்துள்ளது.

மாணவர்களின் இலவச சீருடை விநியோகத்திற்கென கல்வி அமைச்சு அடுத்த ஆண்டு 126 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

இதன் மூலம் நாடளாவிய ரீதியில் 40 இலட் சம் பாடசாலை மாணவர்களுக்கும் 31ஆயிரம் பிக்கு மாணவர் களுக்கும் 10.4 மில்லியன் மீற்றர் இலவச சீருடைத் துணிகள் விநியோகம் செய்யப்படும் என கல்வி அமைச்சின் உயர் அதி காரி ஒருவர் தெரிவித்தார். (ஓ)

# சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

## உலகிற்கு நன்மை செய்தல்



நீங்கள் ஒரு மனிதனுக்கு ஏதாவது ஒன்றைக் கொடுத்து , அதற்குப்பிரதியாக எதையுமே, நன்றியைக்கூட, எதிர் பார்க்காமல் இருந்தீர்களானால் அவன் நன்றி மறந்தாலும் உங்களுக்கு துன்பம் வராது. ஏனெனில் நீங்கள் எதையும் எதிர்பார்க்கவில்லை, பிரதிபலனாக எதையும் பெறும் உரிமை உங்களுக்கு உண்டென்று ஒரு போதும் நீங்கள் எண்ணவில்லை. அவன் எதைப்பெறுவதற்கு தகுதி இருந்ததோ அதையே கொடுத்தீர்கள். அவனது வினைப்பயன் ,அதை அவனுக்குப் பெற்றுத்தந்தது , உங்கள் வினைப்பயன் , உங் களை அவனிடம் அதை சேர்ப்பவர்கள் ஆக்கியது. அப்படி இருக்க ,எதையோ கொடுத்துவிட்டதாக நீங்கள் ஏன் பெருமை கொள்ள வேண்டும். பணம் , மற்றப்பொருட்கள் போன்றவற்றை கொண்டு செல்லும் சுமை தூக்கி மட்டுமே நீங்கள். உலகம் தன் வினைப்பயன் மூலம் அவற்றைப்பெறுவதற்கு தகுதியுடையதாக இருக்கிறது. இதில் நீங்கள் எப்படி , பெருமை கொள்ள முடியும்? நீங்கள் உலகிற்கு கொடுப்பதில் பெரிதாகச் சொல்லிக்கொள்ள எதுவுமில்லை.

# ஊழிக்காலப் பேரழிவை உணர்த்தும் கடும் மழை – பெரும் புயல் 'நிஷா' 01

இராமபிரான் ஆற்றில் நீராடுவதற்கு முன்னதாகத் தனது அம்பை நிலத்தில் ஊன்றி வைக்கின்றார். நீராடிய பின் நிலத்தில் ஊன்றி இருந்த அம்பை இழுத்தெடுக்கிறார்.



அம்பின் நுனியில் குத்துண்ட தேரை ஒன்று துடிதுடித்துக் கொண்டிருக்கிறது. இதனைக் கண்ணுற்ற இராமபிரான் என்னால் ஒரு தேரை உயிர் துறக்கப் போகின்றதே என வருந்தினார்.

தேரையே! நான் அம்பை ஊன்றும் போது நீ கத்தியிருந்தால் நான் உன்னை காப்பாற்றியிருப்பேன் அல்லவா என்கிறார் இராமர்.

சுவாமி எனக்குத் துன்பம் வரும் போதெல்லாம் இராமா ... இராமா... என்று தங்களைத் தான் அழைப்பேன்.

ஆனால் அந்த இராமபிரானே தன் அம்பினால் என்னைக் குத்தும் போது நான் யாரை அழைப்பது. தேரையின் பதிலைக் கேட்ட இராமர் அதிர்ந்து போகிறார்.

தேரையே இது தான் நியதி என்று இராமர் ஆறுதல் கூறுகிறார். இராமரின் அம்பில் குத்துண்ட தேரையின் நிலையிலேயே யாழ். குடாநாட்டு மக்கள் இருக்கிறார்கள்.



யுத்தத்தின் கொடுரத்தின் போதெல்லாம் இறைவா... இறைவா... என்று நாமொழிந்த யாழ்ப்பாண மக்களை அந்த இறைவனே சீண்டி விட்டான்.

ஆம்! 25 ஆம் திகதி நவம்பர் மாதம் 2008ஆம் ஆண்டு இரவு வேளை பெய்த கடும் மழையும், புயல் காற்றும் யாழ். குடாநாட்டு மக்களை வஞ்சம் தீர்த்து விட்டது.

உறங்கிக்கொண்டிருந்த மக்களை சத்தம் சந்தடி இன்றி நுழைந்த வெள்ளம் தட்டியெழுப்பியது.

மழை பெய்தாலும் கடும் காற்று வீசினாலும் வீட்டிற்குள் வெள்ளம் வருவது இதுவே முதல் அனுபவம் என்பதால் சுனாமி வந்து விட்டதோ என்ற ஏக்கத்தில் பதறியடித்தவர்களும் உண்டு.

இந்தப் பதட்டம் கரையோரத்தை அண்மித்தவர்களிடம் கூடிய ஆதிக்கம் செலுத்தியிருந்தது.

உயர்ந்த வீடுகளிலும் மேட்டு நிலங்களிலும் இருந்தவர்களுக்கு உறக்கத்தைத் தவிர வேறு எதுவுமே தெரியாது. சில வேளை சாமத்தில் பெய்த மழையையும் வீசிய புயலையும் கனவாகக்கூட அவர்கள் நினைத்திருக்கலாம்.

விடிந்த பின்பு தான் பெரு வெள்ளத்தின் சமாச்சாரம் அவர்களுக்குத் தெரியவந்தது.

## வெள்ளத்தில் மூழ்கிய வீட்டு உடமைகள்

வீட்டிற்குள் வெள்ளம் புகுந்து விட்ட அதிர்ச்சியில் என்ன செய்வது என்றே தெரியாமல் திகைத்தவர்கள், வீட்டில் இருந்து வெளியேறி பாதுகாப்பான இடத்திற்கு செல்ல வேண்டும் என்ற முடிவைத் தவிர வேறு எதனையும் அவர்களால் எடுக்க முடியவில்லை.

அதேநேரம் வீட்டிற்குள் நுழைந்த வெள்ளம் இந்தளவு தூரம் உயரும் என்ற எதிர்பார்ப்பும் இருக்கவில்லை. இதனால் வீட்டில் இருக்கக் கூடிய தொலைக் காட்சிப் பெட்டிகள், வானொலிகள் உள்ளிட்ட அத்தனையும் வெள்ளத்தில் மூழ்கி உயிர்நீத்துக்கொண்டன.

ஊழிக்கால அழிவை அரங்கேற்ற வந்த பெருவெள்ளம் தன் பலிக்கு முதலில் பண்ணைக் கோழிகளை பதம்பார்த்துக்கொண்டது.

கூட்டிற்குள் நின்ற பண்ணைக் கோழிகளால் எவ்வளவு நேரம் நீந்த முடியும். கூட்டிற்குள்ளேயே நீந்தி நீந்தி நிமலனடி சேர்வதைத் தவிர வேறு வழியே அவற்றுக்கு இருக்கவில்லை.



பண்ணைக்கோழிகளுக்குத்தான் இந்த பரிதாபம் என்றால் தரையில் நின்று மரத்தில் பறந்து கோழித் தூக்கம் போட்டு விட்டு வழமைபோல அதிகாலை வேளை கூவிக் கொக்கரித்து விடியலை வரவேற்ற மகிழ்வில் தரையில் கால் பதிக்க இறக்கை விரித்த போது தான் தரை அல்ல தண்ணி என்ற செய்தியை ஊர்க்கோழிகளால் உணர முடிந்தது.

என்ன செய்வது நீந்திக்களைத்ததைத் தவிர உயிரைக்காப்பாற்ற அவைகளால் முடியவே முடியவில்லை.

இயற்கை அழிவுகளை மிருகங்களும் பறவைகளும் உணர்ந்து கொண்டு பாதுகாப்புத்தேடி விடும் என்ற நிஜம் மனித வளர்ப்பில் கட்டுண்ட மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் பொருத்துடையதல்ல என்பது நிறுதிட்டமான உண்மை.

## கயிற்றினால் கட்டுண்ட பசுக்கள் நீந்திக் கரைசேர முடியாது செத்தன

ஆம்,மாட்டுப்பண்ணையாளர்கள் மாடுகளை பிணைத்து தோட்டங்களில் அடைத்துவிட்டார்கள். வெள்ளம் ஏற ஏற பசுக்கள் எல்லாம் நீந்திக் கரைசேர தம் காலை உதறுகின்றன. என் செய்வது ஒரு பசு மற்றைய பசுவுடன் பிணைக்கப்பட்டிருந்ததால் அவற்றால் நீந்தவே முடியவில்லை.



பசுவாகிய ஆன்மா, ஆணவம். கன்மம், மாயை என்னும் மும்மலங்களினால் கட்டுண்டு கிடக்கும் போது பிறவிப் பெருங்கடலை நீந்தி இறைவனை அடைய முடியாது என்னும் சைவசித்தாந்தம் கூறும் தத்துவம் உண்மையோ பொய்யோ தெரியாது.

ஆனால், அச்சுவேலியில் கயிற்றினால் கட்டுண்ட பசுக்கள் கயிறெனும் தளையினை அறுக்கமுடியாமையினால் நீந்தி கரைசேர வழியின்றி பரலோகம் சென்றமை உண்மை. இந்த உண்மை சைவசிந்தாந்த தத்துவத்தை விளக்குவதாக அமைகிறது.

**என்.விஜயன்**

(வளரும்)

## செய்தித் துளிகள்

### லோசன் கண்டனம்

பாகிஸ்தான் அணி முன்னாள்பயிற்சியாளர் ஜெப்லோசன் (அவுஸ்திரேலியர்) அளித்த ஒரு பேட்டியில் இங்கிலாந்து அணியினர் இந்திய பயணத்தை பாதியில் ரத்து செய்து விட்டு நாடு திரும்பியதும் டெஸ்ட் தொடரில் விளையாட செல்ல தயங்குவதும் தவறானதாகும். 2005ஆம் ஆண்டில் லண்டனில் நடந்த குண்டு வெடிப்பின் போது அவுஸ்திரேலிய அணி தொடர்ந்து போட்டியில் விளையாடியதை அவர்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். இங்கிலாந்து வீரர்கள் இரட்டை நிலையை கடைப்பிடிக் கிறார்கள் என்கிறார்.

### லத்தீப் வலியுறுத்தல்

மும்பை குண்டு வெடிப்புக்கு பாகிஸ்தான் தான் காரணம் என்று இந்தியா கூறுவதால் பாகிஸ்தான் வீரர்கள் யாரும் இந்தியாவில் நடைபெறும் ஐ.பி.எல்., ஐ.சி.எல் போட்டியில் விளையாடக்கூடாது என்று பாகிஸ்தான் அணி முன்னாள் அணித்தலைவர் ரஷித் லத்தீப் வற்புறுத்தியுள்ளார்.

### இந்திய அணிக்கு 3-வது இடம்

டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் அடிப்படையில் நாடுகளின் தரவரிசைப்பட்டியலை ஐ.சி.சி. வெளியிட்டுள்ளது. இதன் படி அவுஸ்திரேலியா தொடர்ந்து முதலிடம் வகிக்கிறது. 2-வது இடத்தில் இருந்த இந்தியா 3ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. 3-வது இடத்தில் இருந்த தென்னாபிரிக்கா பங்களாதேசத்துக்கு எதிரான வெற்றியை தொடர்ந்து 2-வது இடத்துக்கு முன்னேறி உள்ளது. 4-வது இடத்தை இலங்கை அணி தொடர்ந்து வகிக்கிறது.

### டொன் பிராட்மன் அணிந்த 'பெகி க்ரீன்' தொப்பி ஏலத்தில்

1948ஆம் ஆண்டில் டொன் பிராட்மன் அணிந்த பெகி க்ரீன் தொப்பியை ஏலத்தில் விடுவதற்கு ஏல விற்பனையாளர் சார்ள்ஸ் லெஸ்லி பரிசீலனை செய்து வருகின்றார். சுமார் 6 இலட்சம் அவுஸ்திரேலிய டொலர் வரை இது விற்பனையாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கங்குலி சாதனையாளர் அல்ல; அர்ஜுனா ரணதுங்கா சர்வாதிகாரி

## குறை சொல்கிறார் வோர்ன்

(மெல்பேர்ன்)

என்னை பொறுத்த வரை சௌரவ் கங்குலி சிறந்த துடுப்பாட்டவீரரல்ல, நல்ல அணித்தலைவரும் அல்ல என்கிறார் ஷேன்வோர்ன். அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் சுழற்பந்துவீச்சாளர் ஷேன்வோர்ன். 145 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள வோர்ன் 708 விக்கெட்டுக்கள் வீழ்த்தி அசத்தியுள்ளார். இவர் ஷேன் வோர்ன் செஞ்சுரி என்ற புத்தகத்தை எழுதி வெளியிட்டுள்ளார்.

இப்புத்தகத்தில் உலக அரங்கில் தலை சிறந்து விளங்கிய 100 கிரிக்கெற் வீரர்களை பட்டியலிட்டுள்ளார். இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கர் இப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளார். இந்திய வீரர்களான அனில் கும்ளே (13) ராகுல் டிராவிட் (20) சேவாக் (35) கபில் தேவ் (43) ரவி சாஸ்திரி (45) வெங்சர்க்கார் (49) அசாருதீன் (55) ஹர்பஜன்சிங் (67) லக்ஸ்மன் (77) ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர். சௌரவ் கங்குலிக்கு 96வது இடமே கொடுத்திருந்தார் வோர்ன். இந்திய கிரிக்கெட் அணியின் தலை சிறந்த வீரர்களுள் கங்குலியும் ஒருவர். ஆனால் அவருக்கு ஏன் வோர்ன் முக்கியத்துவம் தரவில்லை என்ற கருத்து நிலவியது.

இதற்கு பதிலளித்த வோர்ன் கூறியதாவது, கங்குலி மிகச் சிறந்த வீரராக எனது மனதில் இடம்பிடிக்கவில்லை. ஆனால் இந்திய கிரிக்கெட்டில் அவருக்கு ஏதாவது உரிய அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதனால் தான் அவரை 100 பேர் பட்டியலில் சேர்த்தேன். ஆடுகளத்தில் உணர்ச்சிகரமாகவும், தன்னம்பிக்கையுடனும் செயற்பட கூடியவர், அணித்தலைவராக இருந்த காலத்தில் இந்திய அணிக்கு அதிக வெற்றிகளை பெற்றுத் தந்தவர்.

இதனால் அவரை பட்டியலில் முன்னே கொண்டு சென்றிருக்க வேண்டும் என்று கருதுகிறார்கள். ஆனால் என்னை பொறுத்த வரை அவரது செயல்பாடுகளை பெரிதாக கருதவில்லை.

இந்திய அணிக்கு கங்குலி அணித்தலைவராக இருந்த காலங்களில் அணியில் உலகின் தலை சிறந்த வீரர்களான சச்சின், டிராவிட், அனில் கும்ளே ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். இதனால் அவர் சிறந்த தலைவராகப் பெயர் பெற்றார். ஆட்ட நுணுக்கங்களை நன்கு கையாளத் தெரிந்த சிறந்த துடுப்பாட்ட வீரர் என்றும் கங்குலியை கூற முடியாது. அப்போதைக்கு மோசமான போர்மிலிருந்த பங்களாதேஷ் அணியினர் கூட கங்குலியை எப்படி ஆட்டமிழப்பு செய்வது என்பதை பற்றி நன்கு அறிந்திருந்தனர். ஷோட் பிட்ச் பந்துகளை எதிர்கொள்ள தடுமாறும் கங்குலி அதை கடைசிவரை திருத்திக்கொள்ள முயலவில்லை.

### பண்பாடு தெரியாதவர்

கங்குலியிடம் போற்றத்தகுந்த குணங்கள் எதுவும் இல்லை. எதிரணிகளை தரக்குறைவாக நினைப்பவர். கடந்த 2000ஆம் ஆண்டு இந்தியா வந்த போது கங்குலி, அவுஸ்திரேலிய அணி இதுவரை பலவீனமான அணியை மட்டுமே வீழ்த்தியுள்ளது என்று கூறினார். அவர் கூறியது வேடிக்கையாக இருந்தது. அப்படியென்றால் அதில் இந்தியாவும் தான் இடம்பெற்றிருந்தது. கொல்கத்தாவில் நடந்த டெஸ்ட் போட்டியில் நாணயச்சுழற்சியை போடுவதற்கு மிகவும் தாமதமாக வந்த அவர், எங்கள் அணி அணித்தலைவர் ஸ்டீவ் வோகிற்கு காத்துக்கொண்டிராமல் தனியாக சென்று விட்டார். அப்போட்டியில் வெற்றி பெற்ற இந்திய அணி தொடரை கைப்பற்றியது. இவ் வெற்றி சாதனை புத்தகத்தில் இடம்பெறும் என கங்குலி தெரிவித்தார். உண்மை தான். ஆனால் போட்டியின் வெற்றிக்கு லக்ஸ்மன், டிராவிட்டின் அபார ஆட்டம், ஹர்பஜன் சிங்கின் பந்துவீச்சு ஆகியவற்றுக்கு மட்டுமே பங்கு இருந்தது. இதில் கங்குலியின் ஆளுமைத்திறன் ஒன்றுமே இல்லையே. கங்குலியை பிரின்ஸ் ஒப் கொல்கத்தா என ரசிகர்கள் அழைக்கிறார்கள். அந்த புனைப் பெயரை தனக்கு தானே சூட்டியிருப்பார் என நினைக்கிறேன். இவ்வாறு வோர்ன் தெரிவித்தார்.

### சர்வாதிகாரி ரணதுங்கா

கங்குலியை கடுமையாக சாடியுள்ள ஷேன்




வோர்ன், இலங்கை அணியின் முன்னாள் அணித்தலைவர் அர்ஜுனா ரணதுங்கா மீதும் சரமாரி குற்றம் சாட்டியுள்ளார். இது குறித்து வோர்ன்கூறுகையில், ரணதுங்காவுக்கு எனது புத்தகத்தில் 93ஆவது இடம்கொடுத்துள்ளேன். ஒரு வேளை பட்டியல் 101 ஆக இருந்தால் அந்த இடத்தையே அவருக்கு கொடுத்திருப்பேன். ரணதுங்கா கிரிக்கெட்டின் புனிதம் பாதிக்கப்படும் படியாக பல முறை நடந்து கொண்டுள்ளார். ஒரு முறை நடுவரின் முடிபுக்கு எதிர்ப்பு தெரிவித்த அவர், அணி வீரர்களுடன் மைதானத்தை விட்டு வெளியேறினார். நடுவரை ஸ்டெம்புக்கு பின்னால் நிற்கு மாறு கட்டளையிட்டார். உடற்திறனில் படு மோசமான நிலையில் இருந்த அவர் அடிக்கடி உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளது. என்று பொய் கூறி பை ரன்னரை வைத்துக்கொள்வார். அவரைப் பார்க்கும் போது எப்போதும் ஒரு ஆட்டை முழுவதுமாக விழுங்கிவிட்டதை போலவே தோற்றமளிப்பார். சர்வாதிகாரியாக நடந்து கொள்ளும் அவருக்கு லிட்டில் நெப்போலியன் என்ற பெயரும் உண்டு. ஆனால் அதை அவர் பெருமையாகக் கருதிக் கொண்டார். ரணதுங்காவை அவுஸ்திரேலியாவின் அலன் போர்டரும் ஒப்பிடுகிறார்கள். இது பற்றி போர்டருக்கு தெரிந்தால் அவர் மிகவும் வருத்தப்படு வார் என்றார்.

(5)

# அப்துர் ரஸாக்கிற்கு பந்துவீச தடை

பங்களாதேஷ் அணியின் இடதுகை சுழற்பந்து வீச்சாளர் அப்துர் ரஸாக்கிற்கு சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் பந்துவீச தடை விதிக்கப்பட்டுள்ளது.

பந்தை எறிவதாகக் குற்றம் சாட்டப்பட்ட ரஸாக்கின் பந்துவீச்சு குறித்து ஆய்வு



நடத்திய சுயாதீனக் குழுவின் அறிக்கையை அடுத்தே சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

பங்களாதேஷில் அண்மையில் நடைபெற்ற நியூஸிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரின் போது நடுவராக பணியாற்றி டெரல் ஹாபர் மற்றும் அஷோக டி சில்வா ஆகியோர் அப்துர் ரஸாக்கின் பந்துவீச்சு குறித்து சந்தேகம் தெரிவித்தனர். குறிப்பாக அவர் வேகமாக பந்தை செலுத்தும்போது எறிவது போன்று அமைவதாக மேற்படி நடுவர்கள் ஐ.சி.சி. இடம் புகார் தெரிவித்தனர்.

இதனை அடுத்து ஐ.சி.சி யின் மனித இயக்கம் தொடர்பான விசேட நிபுணர் மார்க் போர்த்துஸ்ஸின் கீழ் சுயாதீன குழு ஒன்றின் மூலம் அப்துர் ரஸாக்கின் பந்துவீச்சு குறித்து அவுஸ்திரேலிய விளையாட்டு துறை பல்கலை கழகத்தில் ஆய்வு செய்யப்பட்டது. இதன்படி அவர் பந்தை எறிவதாக இந்த குழு ஐ.சி.சி இடம் அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

குறிப்பாக அப்துர் ரஸாக் பந்துவீசும் போது அவரது கை ஐ.சி.சி. யினால் அனுமதிக்கப்பட்ட 15 பாகையை விடவும் கூடுதலாக வளைவதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது அவரது கை பந்துவீசும்போது சராசரியாக 25 பாகையில் வளைவதாகவும் வேகமாக பந்தைவீசும் போது 24 பாகை வளைவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் அப்துர் ரஸாக்கிற்கு இந்த முடிபை எதிர்த்து ஐ.சி.சி. இடம் மேன்முறையீடு செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மேன்முறையீட்டு மனு தோல்வியில் முடிந்தால் அவர் தன் பந்து வீச்சு முறையை திருத்திக்கொண்டு மீண்டும் பரிசோதனைக்கு கோரலாம். இதன்படி அவருக்கு பங்களாதேஷ் முதல்தர கிரிக்கெட் போட்டிகளில் பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் மேற்பார்வையின் கீழ் விளையாட வாய்ப்பு கிடைக்கும்.

எனினும் அப்துர் ரஸாக்கின் பந்துவீச்சில் சந்தேகம் தெரிவிக்கப்படுவது இது முதல் முறையல்ல. இதற்கு முன்னர் கடந்த 2004 ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற ஆசிய கிண்ண போட்டியில் பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தின் போதும் அவர் பந்தை எறிவதாக குற்றம் சாட்டப்பட்டது. இது அவர் விளையாடிய இரண்டாவது ஒருநாள் சர்வதேச போட்டி என்பது குறிப்பிடத்தக்கது.

பங்களாதேஷ் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளரான அப்துர் ரஸாக் இது வரை 81 ஒரு நாள் சர்வதேச போட்டிகளில் விளையாடி 111 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

அத்துடன் 5 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள அவர் 7 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

(5)

# தூங்காமல் தவித்த சச்சின்

(மும்பை)

மும்பை தீவிரவாதத் தாக்குதல் நடைபெற்றபோது இரவில் தூங்க முடியாமல் தவித்ததாக சச்சின்டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட் வீரரான சச்சின் டெண்டுல்கர் தன்னுடைய நேர்த்தியான அதிரடி ஆட்டத்தின் மூலம் உலக பந்து வீச்சாளர்களை தூக்கமில்லாமல் செய்தவர். ஆனால் டெண்டுல்கரோ மும்பையில் நடத்தப்பட்ட கோரத்தாக்குதலால் தூக்கமின்றி தவித்திருக்கிறார்.

இதுபற்றி சச்சின் கூறியதாவது;கட்டாக் ஒரு நாள்போட்டி முடிந்த பின்னர் தீவிரவாதத் தாக்குதல் பற்றிய செய்தி கிடைத்தது. அந்தக் கணம் முதல் பாதிப்பட்டுள்ளேன்.

தொலைக்காட்சியில் அந்தக் கோரத் தாக்குதல் பற்றிய காட்சிகளை பார்த்து விட்டு நிலைகுலைந்து போனேன்.

காட்சிகளை மறக்க முடியாததால் இரவில் சரியாகத் தூங்கமுடியவில்லை. இது மும்பை மீதான தாக்குதல் மட்டுமல்ல. இந்தியா மீதான தாக்குதல். மும்பை வாசிகளின் உயிரை காப்பாற்ற வீரத்தோடு போராடிய பொலிஸாருக்கும் எனது வணக்கங்கள். அதேபோல தேசிய பாதுகாப்புப் படை கொமாண்டோக் களுக்கும் எனது வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

(5)

## றொனால்டோவிற்கு தங்கப்பந்து விருது

2008ஆம் ஆண்டின் சிறந்த ஐரோப்பிய கால்பந்து வீரருக்கான தங்கப் பந்து விருது போர்த்துக்கல் வீரர் கிறிஸ்டியானோ றொனால்டோவிற்கு கிடைத்துள்ளது. இங்கிலாந்து கால்பந்து கழகமான மன்செஸ்டர் யுனைடெட் அணிக்கு விளையாடும் வீரர்களில் 4ஆவது வீரராக றொனால்டோ இந்தப் பரிசை தட்டிச் சென்றுள்ளார்.

பிரான்ஸ் கால்பந்து பத்திரிகை வெளியிட்டுள்ள வாக்கெடுப்பு முடிவுகளில் பர்சிலோனா வீரர் லியோனல் மெஸி இரண்டாம் இடத்திலும் லிவர்பூல் வீரர் டோரஸ் 3ஆம் இடத்திலும் உள்ளனர்.

ஏற்கனவே இவர் தொடர்ந்து இரண்டாவது முறையாக இங்கிலாந்தின் சிறந்த கால்பந்து வீரராக தேர்வு செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த பருவ காலத்தில் கிறிஸ்டியானோ றொனால்டோ 42 கோல்களை அடித்துள்ளார்.

மாநகர சபை, யாழ்ப்பாணம்.
மாநகர சபை, யாழ்ப்பாணம்.





இத்தாலிக்குச் சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பாப்பரசருடன் சந்திப்பதைப் படத்தில் காணலாம்

# வெலிகந்தையில் வர்த்தகரிடம் கொள்ளை

(கொழும்பு)

பொலனறுவை வெலிகந்தை பகுதியில் நேற்று முன்தினம் மாலை வர்த்தகர் ஒருவரிடமிருந்து துப்பாக்கி முனையில் ஐம்பது லட்சம் ரூபா கொள்ளையிடப்பட்டுள்ளது.

தனியார் வாகன நிறுவன மொன்றின் உரிமையாளரிடமே நேற்று முன்தினம் மாலை வெலிகந்தையில் சன நடமாட்ட மற்ற பகுதியில் வைத்து ஆயுதபாணிகள் இந்தப் பணத்தை கொள்ளையடித்துச் சென்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

இந்த வர்த்தகர் பணத்துடன் வாகனத் தில் சென்று கொண்டிருந்த போது அவர்களை மோட்டார் சைக்கிள் ஒன்றில் பின்தொடர் இந்த ஆயுதபாணிகளே வாகனத்தை நிறுத்தி ஆயுத முனையில் ஐம்பது இலட்ச ரூபாயையும் கொள்ளையடித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக வெலிகந்தை பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து அவர்களும் தீவிர தேடுதல்களை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# கிளிநொச்சி மாவட்டத்தில் 56 552 வீடுகள் சேதம்

(கிளிநொச்சி)

படையினரின் போர் நடவடிக்கை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் 56 ஆயிரத்து 552 வீடுகள் அழிவடைந்துள்ளதாக கிளிநொச்சி அரச செயலகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சியான போர் நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் அமைதிச் சூழல் நிலவிய காலத்தில் பெருமளவான பணத்தினைச் செலவு செய்து வீடுகளை அமைத்திருந்தனர்.

இந்நிலையில் படையினர் மேற்கொண்டுள்ள போர் நடவடிக்கை காரணமாக 56 552 வீடுகள் அழிவடைந்துள்ளதாக புள்ளி விபரம் தெரிவிக்கின்றது.

கிளிநொச்சி நகரத்திலேயே கூடுதலான வீடுகள் அழிவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## 12 தமிழ் இளைஞர்கள் அம்பாறையில் கைது

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று பிரதேசத்தில் கடந்த இரு நாட்களாக இடம்பெற்ற சுற்றிவளைப்புத் தேடுதலின் போது 12 தமிழ் இளைஞர்கள் கைதானதாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

அக்கரைப்பற்று, பனங்காடு மற்றும் கண்ணகிபுரம் ஆகிய பகுதிகளில் பொலிஸாரும் சிறப்பு அதிரடிப்படையினரும் இணைந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். கைது செய்யப்பட்ட 12 இளைஞர்களும் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டனர்.

இதேவேளை காரைதீவு பிரதேசத்திலும் படையினர் தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (எ-5)

## கடற்படையினர் தாக்குதல்

இராமேஸ்வரத்தில் இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது மீண்டும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இராமேஸ்வரத்தில் இருந்து 20 படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களை வழிமறித்து மீன் பிடி வலைகள், ஜி.பி.எஸ்., கருவிகள் ஆகியவனவற்றை இலங்கை கடற்படையினர் நாசம் செய்துள்ளனர்.

மேலும் பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள இறால் மீன்களையும் அவர்கள் பறிமுதல் செய்துள்ளனர். இதற்கிடையில் கடந்த 4 நாட்களுக்கு முன்னர் காணாமல் போன இராமேஸ்வரம் மீனவர்கள் கரை திரும்பியுள்ளனர்.

படகு பழுதடைந்ததால், பாலத்தீவில் இருந்ததாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (ச)

## கிளஸ்டர் குண்டு...

கிளஸ்டர் குண்டு உள்ளது எனும் பின்னணியிலேயே 100க்கும் அதிகமான உலக நாடுகள் இதன் பாவனைக்கு எதிரான உடன்படிக்கைக்கு இணங்கியுள்ளன.

அந்த வகையில் உலக நாடுகளின் இந்த ஆக்கபூர்வமான செயற்பாட்டுக்கு ஆதரவாகவும் அதேவேளை இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது இந்த வகை பேரழிவு ஆயுதங்களைப் பயன்படுத்துகின்றமையை உலகின் கவனத்திற்கு கொண்டுவரும் முகமாகவும்,

இலங்கைக்கான ஆயுத உதவிகளை நிறுத்துமாறு உலக நாடுகளைக் கோரியும் கவனயீர்ப்பு ஒன்றுகூடல் நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நோர்வே நாடாளுமன்றம் முன்பாக நடைபெறவுள்ளது. (ச-5)

## விசாரணைகள் முடியும்...

படுகிறது என்பதை நிரூபிக்க வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் கூறியிருந்தது.

இலங்கையின் பிந்திய நிலைவரங்கள் குறித்து ஆராய்வதற்கு ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் குழுவொன்றும் விஜயம் மேற்கொண்டிருந்தது.

இந்த நிலையில் இலங்கையின் மனித உரிமைகள் நிலைமைகள் தொடர்பாக விசாரணைகளை நடத்தவேண்டியிருப்பதாக ஐரோப்பிய ஒன்றியம் கூறியிருந்தது.

இதற்கு முதலில் எதிர்ப்புத் தெரிவித்த இலங்கை அரசாங்கம் பின்னர் இணங்கியிருந்தது.

விசாரணைகள் முடியும் வரை ஏற்றுமதி வரிச்சலுகை நீடிக்கப்பட்டிருப்பதால் இலங்கைப் பொருள்களை வரியின்றி ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஏற்றுமதி செய்வதற்கான சந்தர்ப்பம் இலங்கைக்கு கிடைத்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஏற்றுமதி வரிச்சலுகை தொடர்ந்தும் நீடிக்கப்படா விட்டால் பலர் வேலைகளை இழக்க வேண்டி ஏற்படும் எனவும் குறிப்பாக ஆடை உற்பத்தி தொழிலாளர்கள் பலர் வேலை இழக்க நேரிடும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சி எச்சரித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-5)

## பாக்.மீது இராணுவ...

பதாக இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்தார்.

பாகிஸ்தானில் செயற்படும் தனிநபர்கள் மற்றும் பயங்கரவாதக் குழுக்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், குறிப்பிட்ட இருபது பயங்கரவாதிகளை இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் பாகிஸ்தானிய அரசிடம் கோரியிருக்கிறோம் என்று பிரணாப் முகர்ஜி தெரிவித்தார்.

இருபது பெயர் பட்டியலில் லஷ்சர்-இ-தொய்பா மற்றும் ஜெய்ஸ்-இ-மொகமத் இயக்கங்களின் தலைவர்களும் அடங்குவார்கள்.

இதனிடையே மும்பையில் நடைபெற்ற பயங்கரவாதத் தாக்குதல்கள் குறித்து செயற்படக் கூடிய அளவு கடற்படைக்கு முன்கூட்டியே புலனாய்வுத் தகவல்கள் கிடைக்கவில்லை என்றும் இது நடைமுறைப் பிரச்சினையால் ஏற்பட்ட தோல்வி என்றும் இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் சுரேஷ் மேத்தா தெரிவித்துள்ளார்.

முன்கூட்டியே புலனாய்வுத் தகவல்கள் கிடைத்தும், கடற்படையும், கடலோரக் காவற்படையும் உஷாராக செயற்படவில்லை என்றும் அதனால் தான் இவ்வளவு பெரிய தாக்குதலை சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இந்த நிலையில் கடற்படைத் தளபதி இது தொடர்பாக விளக்கமளித்தார். (ச)

## கூட்டமைப்பு...

விடயத்தில் அடுத்த கட்டமாக என்ன நடவடிக்கை மேற்கொள்வது என்பது குறித்து வரும் 10 ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த எம்.பிக்கள் 22 பேரும் ஆலோசனை நடத்த உள்ளோம் என்றும், இந்த கூட்டம் சென்னை அல்லது டெல்லியில் நடக்கலாம் என்றும் கூறினார். (ச-5)

## இலங்கையில் போர்...

இலங்கையில் போரை உடனே நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்த தமிழக எம்.பிக்கள் குழு மனு கொடுத்தது.

தமிழகத்தைச் சேர்ந்த லோக்சபா மற்றும் ராஜ்யசபா எம்.பிக்கள் பிரதமரை நேற்று சந்தித்து இலங்கையில் போர் நிறுத்தம் குறித்து வலியுறுத்த முடிபு செய்யப்பட்டிருந்தது.

இதன்படி தி.மு.க., காங்கிரஸ், பா.ம.க எம்.பிக்கள் நேற்று பிரதமரை சந்தித்தனர்.

பாலு, ராஜா, கனிமொழி, வாசன், இளங்கோவன், தங்கபாலு, ஜெயந்தி நடராஜன், அன்புமணி ராமதாஸ் உட்பட 34 எம்.பிக்கள் இக்குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

பிரதமரிடம் தமிழக எம்.பிக்கள் அளித்த மனுவில் கூறப்பட்டுள்ளதாவது, இலங்கைத் தமிழர்கள் தொடர்ந்து கொல்லப்படுவது உலக அளவில் தமிழ் மக்களை வேதனை அடையச் செய்துள்ளது.

இலங்கை அரசு தமது சொந்தக் குடி மக்கள் மீது நடத்திவரும்போரை உடனே நிறுத்தி அங்குள்ள தமிழர்களின் நியாயமான உரிமைகளை பெற அரசியல் ரீதியான தீர்வு காண வேண்டும்.

இதற்காக தமிழகத்தில் பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

நிவாரண நிதி வசூலிக்கப்பட்டு 80 ஆயிரம் பேருக்கு நிவாரணப் பொருட்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இத்தனை நடவடிக்கைகளுக்குப் பின்பும் இலங்கையில் போர் நிறுத்தம் மேற்கொள்ளப்படவில்லை.

தமிழினத்தை ஒழிக்கவேண்டும் என்பதில் இலங்கை அரசு பிடிவாதமாக உள்ளது.

**சொந்த மண்ணில் மதிப்புடன் வாழ**

ஆயிரக்கணக்கான தமிழ்க் குழந்தைகள் மாதக்கணக்காக பள்ளிகளுக்குச் செல்ல முடியாமல் காடுகளிலும் மலைகளிலும் பதுங்கி தமது உயிரைக் காப்பாற்ற அலைந்து திரிகின்றனர்.

தமிழகத்தைச் சேர்ந்த எம்.பிக்களாகிய நாங்கள் இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற தமிழர்களுக்கு எதிராக நடத்தப்படும் போரை உடனே நிறுத்தவும் அங்குள்ள தமிழர்கள் சொந்த மண்ணில் மதிப்புடன் வாழவும் மத்திய அரசு தலையிடவேண்டுமெனவும் வலியுறுத்துகிறோம். இவ்வாறு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட நடவடிக்கை எடுப்பதாகவும் இது தொடர்பாக முதல்வர் கருணாநிதி தலைமையிலான அனைத்துக் கட்சித் தலைவர்கள் குழு தன்மை 4 ஆம் திகதி சந்திக்கும்போது ஆலோசனை நடத்துவதாகவும் பிரதமர் மன்மோகன் சிங் உறுதியளித்துள்ளார்.

**கம்யூனிஸ்ட் எம்.பிக்கள்**
**எதிர்க்கட்சிகள புறக்கணிப்பு**

தமிழக எம்.பிக்கள் குழு நேற்று பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்தது.

இலங்கையில் போர் நிறுத்தம் செய்வது உள்ளிட்ட கோரிக்கைகள் அடங்கிய மனுவை பிரதமரிடம் எம்.பிக்கள் அளித்தனர்.

இக்குழுவில் தி.மு.க -காங்கிரஸ்-பா.ம.க -ம.தி.மு.க (கணேசன், இராமச்சந்திரன்) எம்.பிக்கள் 34 பேர் மட்டும் பங்கேற்றனர். எதிர்க்கட்சிகளான அ.தி.மு.க -ம.தி.மு.க (கிருஷ்ணன், ரவிச்சந்திரன்) மற்றும் மார்க்சிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் எம்.பிக்கள் யாரும் பங்கேற்கவில்லை.

பிரதமரைச் சந்திக்க அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் முதல்வர் கருணாநிதி இன்று டில்லி புறப்படுகிறார். அதில் முக்கிய கட்சிகளின் தலைவர்கள் இடம்பெறுகின்றனர்.

அ.தி.மு.க-ம.தி.மு.க, மார்க்சிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கட்சியினர் புறக்கணிக்கவுள்ளனர்.

இந்தக் குழுவில் இடம்பெற தே.மு.தி.க தலைவர் விஜயகாந்துக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

அவரும் இந்தப் பயணத்தை புறக்கணிப்பார் எனத் தெரிகிறது. (ச)

## இந்தியாவின்...

முன்வந்து ஈழத் தமிழர்களுக்கு நிதியையும் நிவாரணப் பொருட்களையும் வழங்கினர்.

அவ்வாறு வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்களில் முதற்கட்ட பொருட்களே வன்னிக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## கவலையை...

இலங்கையில் நடக்கும் போரினால் அப்பாவி தமிழர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்காக தமிழக அரசின் சார்பில் அனுப்பி வைக்கப் பட்டிருக்கும் நிவாரண உதவிகள் முறையாக சென்றடையவில்லை என்ற கவலையை தெரிவித்தோம்.

எங்கள் கவலையை புரிந்து கொண்ட பிரதமர் நிச்சயம் இது சம்பந்தமாக இலங்கை அரசை வலியுறுத்துவதாக ஆறுதல் அளித்துள்ளார் என்று பதில் அளித்தார். (ச)

## மணலாறு...

இதில் பூதன்வயல் கிராமத்தில் மூன்று வீடுகள் சேதமடைந்துள்ளன. அத்துடன் பயன்தரு மரங்கள் உட்பட வீட்டுத் தோட்டங்கள் பலவும் அழிவடைந்துள்ளன என வன்னித் தகவல்கள் தெரிவித்தன. (எ-1)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.12.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.